தென்றல்

19-9-59

ஆசிரியர்

கண்ணதாசன்

மலராத விழிகள் மலரட்டும்

இற்றைக்குப் பன்னூறு ஆண்டு கட்கு முன்னர் தோன்றிய முது மொழி நம்தமிழ் மொழி. மொழியிலே சிறப்பு வாய்ந்ததும், இனிமை வாய்ந்ததும் இம்மொழியேயாகும்.

"தோன்றும் பொருள்கள் யாவும் அழியும்" என்பது அறிவியல் கண்ட முடிபு. ஆனால் தமிழ் மொழி தான் தோன்றி, கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு முதலிய மொழி களைத்தன்னிடமிருந்துதோற்றுவித்து, ஆல்போல் தழைத்து அருகுபோல் வேர்விட்டு சீருடனும் சிறப்புடனும் விளங்குகிறது. இதனைப்பேராசிரியர் சுந்தரம் பிள்ளை எம். ஏ. அவர்கள் தாம் இயற்றிய மனோன்மணீயம் என்னும் நூலில்

"கன்னடமுங் களிதெலுங்குங்
கவின் மலையாளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே"

எனக் கூறியதிலிருந்து தமிழின் சிறப்பை அறியலாம்.

இத்தகைய அரும்பெருஞ் சிறப் பினைப் பெற்றிருக்கும் தமிழ் மொழி, தன்னகத்தே சிறந்த கருத்துக் கரு வூலங்களைக் கொண்டுள்ளது. அத் தகைய கருத்துக் கருவூலங்கள், மக்களின் வாழ்வு வளம் பெறுவதற் கான பல்வேறு வழிகளையும், தமிழின் சிறப்பினையும் உலகினுக்குப் பறை சாற்றுகின்றன.

நூல்களைப் பிழையற எழுதுதற் கும், மொழித்திறத்தின் முட்டறுத்துப் பயில்வதற்கும், இலக்கணம் உறு துணை புரிகிறது. இலக்கணத்தை உலகிலேயே முதன் முதலில் தோற்றுவித்தவன் தமிழன் ஆவான் என்பது ஆராய்ச்சியாளர்களின் துணிபு. பவணந்தி இயற்றிய இலக் கண நூலாகிய நன்னூலிற்கு விருத்தி உரை செய்தவர் சிவஞான முனிவர் ஆவர். இவர் தமிழுடனே வடமொழி யிலும் புலமை நிரம்பியவர். இவர், "தமிழ் மொழிப் புணர்ச்சிக்கட்படும் செய்கைகளும் குறியீடுகளும், வினைக் குறிப்பு, வினைத் தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர் திணை அஃறிணை முதலிய சொற் பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும் அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும் இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படா" என்று தமிழிலக்கணத் தின் சிறப்பியல்புகள்பற்றி விரிக்கு மிடத்துக் கூறுகிறார்.

தமிழின் பெருமையை நன் குணர்ந்த மேனாட்டறிஞர் பலர் இங்குற்று, தமிழினை நன்கு பயின்று அதில் தேர்ச்சி பெற்றுத் தமிழிலுள்ள சிறந்த இலக்கியங்களை தத்தம் மொழிகளில் மொழி பெயர்த்துச்சென் றிருக்கின்றனர். அவர்களில் குறிப் பிடத்தக்கசிலர்வீரமாமுனிவர், கால்டு வெல், போப்பையர் முதலியோர். "தமிழ்மறை" என்று போற்றப்படும் திருக்குறள் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு மேல்நாடு களில் இன்றும் போற்றப்பட்டு வரு கிறது என்பது, இலண்டன் மாநகரத் திலுள்ள நூல் நிலையத்தில் நம் திருக் ...றள் ஆங்கில வடிவில் இடம்பெற் ...ருப்பதின்மூலம் அறியலாம். ...ன்னும் சில தீவிரவாதிகள் மேனாட் ... பிறந்திருந்தும், தமிழ் பயின்று ...ல் ஏற்பட்ட பற்று பாசம் காரணத்தால், பெற்றோர்களாலிடப் பட்ட பெயரைக்கூட மாற்றித் தமிழில் வைத்துக்கொண்டுள்ளனர்.

தமிழின் தொன்மையையும், இனி மையையும், பெருமையையும் அறி யாத மூடர் சிலர், தமிழில் கற்க என்ன இருக்கிறது என ஏளனத்து டன் வினவுவதோடல்லாது, வேற்று மொழியின் "சிறப்பி"னையும் விவரிக் கின்றனர்.

வேற்றுநாட்டு மொழிக்காரர்கள் தமிழினை அறிந்திருக்கும் அளவுகூட இந்நாட்டு மண்ணில் பிறந்த சிலர் அறியவில்லை என அறியும்போது, உள்ளம் வெம்புகிறது; வேதனை யடைகிறது. உண்மையிலேயே அவர் கள் தமிழின் பெருமையை அறிய வில்லையா, அல்லது அறிந்தும் அறி யாததுபோல் நடிக்கிறார்களா என்பது புலனாகவில்லை. ஒரு நாட்டை மற் றொரு நாடு அடிமைப்படுத்த விரும் பினால், அது முதலில் அந்நாட்டு மக்கள் பேசும் மொழியைச் சிறிது சிறிதாக அழித்து, தன்னுடைய மொழியை அந்நாட்டில் புகுத்துமாம். மொழி அழியும்பொழுது இனப்பற்று அழியும்; இனப்பற்று அழியும்பொழுது இனஒற்றுமை அழியும்; இனஒற்றுமை அழியும்பொழுது, நாடு அடிமைப் படும். இது நாட்டை அடிமைப்படுத்த நினைக்கும் நச்சுமனம் படைத்தோரின் அரசியல் தத்துவமாகும். பொன்னுக் கும் பதவிக்கும் ஆசைப்பட்டு, அந்நிய னிடம் கைக்கூலி பெற்று, அவனிடம் தாம் பிறந்த பொன்னாட்டை அடகு வைப்பதற்காகப் பாடுபடும் மனித இனத்தைச் சார்ந்த மாக்கள் ஒருக் கால் மேற்கூறிய, நாட்டை அடிமை யாக்கும் அரசியல் தத்துவத்தைப் பின்பற்றலாம். அவர்களுக்குக் காலம் பதிலளிக்கக் காத்திருக்கிறது.

தமிழ்மொழியில் கற்க என்ன இருக் கிறது என்ற வினாவினை எழுப்பு வோர்க்கு விடையிறுக்கும் முகத்தான் எதிர்மறையில் தமிழில் கற்க என்ன இல்லை என்ற வினாவினை எழுப்புதல் வேண்டும். தமிழ்மொழியிலுள்ள நூல் கள் அனைத்தையும் கற்றுவிட்டு, மேற்கொண்டு கற்பதற்கு நூல்கள் இல்லாததுபோலவும், வேற்றுமொழி களில் தான் கற்பதற்கு நூல்கள் கணக்கற்றுக்கிடக்கின்றன எனவும் கருதும் கண்ணற்ற கபோதிகள் "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" என்ற முதுமொழியை அறிந்திலர்போலும்.

தமிழ் அன்னையின் பெருமையறி யாது, அவதூறு கூறுவோர் அன்னை யிருக்கும் திக்குநோக்கித் தம் விழி களைத் திருப்பட்டும். அவ்வாரணங்கு அணிந்திருக்கும் அணிகளை நோக் கட்டும்; கரந்தனில் குறளும், கால் தனில் சிலம்பும், காதுகளில் குண்டல கேசியும் வளையாபதியும், இடைதனில் (மணி)மேகலையும் அணிந்திருக்கும் அழகு அளவிடற்கரியது. இவ் வனைத்தையும் கண்ணுற்ற பிறகும் 'அவளிடம் என்ன இருக்கிறது' என்போரை எள்ளி நகையாடு வதைத் தவிர வேறு செய்யவல்லது யாது?

அம்மட்டோ! தமிழன்னை தம் மக்களுக்கென்று அளித்திருக்கும் சொத்துக்கள் சில இதோ!

"நற்றிணை நல்ல
குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத்
தோங்கு பரிபாடல்
கற்றறிந்தா ரேத்துங்
கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை"

"நாலடி நான்மணி
நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை
பழமொழி மாமூலம்
இன்னிலைசொற் காஞ்சியோ
டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க்
கணக்கு"

"முருகு பொருநாறு
பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக்
காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை
கோல்குறிஞ் சிப்பட்டினப்
பாலைகடாத் தொடும்
பத்து".

தமிழ் அன்னையிடம் இவ்வளவு நூல்களா இருக்கின்றன? எவ்வண் ணம் கற்பது எனக் கருதுபவர்கள் ஒவ்வொன்ருகக் கற்கட்டும். ஒன்று யினும் நன்றாகக் கற்கட்டும். அவ் வொன்றும் முதலில் குறளாகயிருக் கட்டும். காரணம் திருக்குறள் வாழ்க் கைக்கு இன்றியமையாத அறம் பொருள் இன்பம் என்னும் பொருள் களைப்பற்றி அதிகாரத்திற்கு 10 குறளாக 133 அதிகாரங்களில் 1330 குறளில் விரிவாக ஆராய் கிறது. ஒருவன் திருக்குறளை ஐயமற வும் ஆழ்ந்தும் கற்பானேயாகில் அவன் அவ்வொரு நூலின் மூல மாகவே பெரும் புலவனாகிருன்.

திருக்குறளின் பெருமையைக் கூறப்போந்த நத்தத்தனார் என்பவர்

"ஆயிரத்து முந்நூற்று
முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு
பகர்ந்ததற்பின்-போயொருத்தர்
வாய்கேட்க நூலுளவோ
மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்"

எனக் கூறுகின்றார்.

ஆதலால் தமிழின் பெருமையை உணராதோர் இனியேனும் உண ரட்டும்.

திறவாத அவர் தம் விழிகள் திறக் கட்டும்.

பிறந்த பொன்னாட்டையும்பெற்றுப் பேணி வளர்த்த அன்னையையும் மறந்து அறியாமை இருளில் மூழ்கி, திசை மாறிச் செல்வோர், கலங்கரை விளக்காம் வள்ளுவன் காட்டும் குறள்நெறி சென்று, தமிழன்னையின் தாள் தொழட்டும்.

—ம. சந்திரசேகரன்.

வாழ்க! வாழ்க!

அன்புக்கும் பெருமைக்குமுரிய திரு. கே. ஏ. மதியழகன் பி. ஏ. அவர்கள் ஆனைமலை திரு. எஸ். குப்புசாமி அவர்களின் திருமகளார் இராச சுந்தரி அவர்களை 9-9-'59 அன்று வாழ்க்கைத் துணைவியாக ஏற்றதை அறிவிக்க மகிழ்கிறோம். இம்மணவிழாவிற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை ஏற்றார்கள். திருமதி இராணி அண்ணாத்துரை, திரு. என். வி. நட ராசன், திரு. எஸ். டி. சோமசுந்தரம் முதலிய பலர் வாழ்த்துரைத்தனர். எண்ணற்ற வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் வந்து குவிந்தன. இறுதியில் திரு. மதியழகன் அவர்கள் நன்றி தெரிவித்துக்கொண்டார்கள்.

"தென்றல்"லின் வாழ்த்துக்களும் உரித்தாகுக. வாழ்க! வாழ்க!

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 6 | 19—9—'59 | இதழ் 14

ஆள்வதும் வாழ்வதும் எந்நாளோ ?

பூத்துப் பொலிகிறது கழகம். கோர்த்துக் கட்டிய முல்லை போல், சேர்த்து வைத்த அருங்கனிபோல், கழகம் மணக்கிறது; இனிக்கிறது. கவிதையின் பொருளாய், ஆலின் நிழலாய், பொதிகையின் தென்றலாய், வளர்கிறது கழகம்; ஏழையர் பயன் பெறுகின்றனர்; ஏமாந்தோரய் இருந்தோர், வாழ்வு பெறுகின்றனர்.

வள்ளல் கைவெள்ளிப் பணமாய், தாமரைத் தடாகத் தெள்ளிய நீராய்க் கழகம் உதவுகிறது.

இனஉணர்வின் முத்திரையாய்த் திகழ்கிறது.

ஏழையர் உலகின் காவலனாய் வளர்கிறது.

மதகளிறின் முழக்கமாய்ச் செல்கிறது.

துன்பத்திடை வாய்த்த தூய நண்பனாய் உதவுகிறது.

ஆமாம், காட்சிக்கு, எளிய-அளவில் பெரிய தி. மு. கழகத்தின் வெற்றியின் வரலாறு இவ்வளவுதான்.

தந்தையின் செயலை, மாட்டுமந்தைபோல் ஒப்புக்கொள்ள மறுத்தோம். தன்மானப் பணியில் களங்கம் சேர்வதை ஏற்க மறுத்தோம். அதன் பயனாய், வழியும் கண்ணீர்த்துளிகளோடும், துடிக்கும் தூயநெஞ்சோடும் நாம் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. கடமை ஒன்றே நம் வாழ்வாதலால், பாசத்தை மறந்தோம்; உறவை இழந்தோம்; தனியரானோம்.

"நெடுநாள் வாழமுடியுமா இவர்கள் ? நீண்டகாலம் நிலைநிற்கமுடியுமா இந்தக் கூட்டம் ?" என்றெல்லாம் கணித்துக்கொண்டிருந்தோரிடை நாம் எழுந்துநின்றோம். நாம் சொல்லும் கொள்கையில் நாம் வென்றோம்.

17-9-49 ! அன்றுதான் இளைஞர்கள் கூட்டம் கிளர்ந்தது; தனி அணி எழுந்தது.

17-9-'59 ! இன்று ஆண்டு பத்தாகிவிட்டது. தத்தித் தவழ்ந்த அச்சம் போய், எவர்வரினும் எது நேரினும் ஏற்கும் நெஞ்சத் துணிவுபெற்றுவிட்டோம். இந்தப் பத்தாண்டுகளில் நாம் பெற்றுள்ள வளர்ச்சியும் ஆற்றியுள்ளதொண்டுகளும் அளவிறந்தன. நம்வளர்ச்சியைக் கிண்டல் செய்வோர், தம் வளர்ச்சியையும் நம் பாதையிலேதான் காண முனைகின்றனர். அந்த "மாமட்டங்கள்", நம் முறையில் அமைக்கும் "மாவட்டங்"களும் "மாநில"ங்களுமே அதற்குத் தக்க சான்றுகள். எனவே நம் வளர்ச்சியை எள்ளி நகையாடுவார் பற்றி நமக்குக் கவலையில்லை.

இந்தியை அழித்தோம்; குலமுறைக் கல்வித்திட்டத்தை நொறுக்கினோம்; கல்லக்குடியை எதிர்த்தோம்; ஆணவத்தின் நாவைத் துண்டித்தோம்; சிங்களத்தின் வெறியைக் கண்டித்தோம்; புயலில் வதைந்தோர்க்கு இரங்கினோம்; இவ்வாறு எண்ணரும் தொண்டுகள், ஈன்ற தாய்நாட்டிற்கு ஆற்றினோம். இன்னும் பல இன்றும் ஆற்றுகிறோம். இவற்றையெல்லாம்விடத் தலைசிறந்த ஒன்று இது: மக்களாட்சிப் பண்பை நிலைநாட்ட, தில்லி ஆட்சிக்குக் கொள்ளிவைக்க, தேர்தல்களில் கலந்துகொண்டோம். எள்ளிநகையாடினோர் மூலைகளில் மறையும்படி; பல வெற்றிகளை ஈட்டினோம். சட்டமன்றில் திராவிடம் ஒலிக்கிறது; பதினைவர் இருக்கின்றனர். தில்லியும் தன் கேளாக் காதைத் திருப்பிக் கேட்க, இருவரை அனுப்பினோம். நகராட்சி மன்றத் தேர்தல்கள் வந்தன. இதற்குமுன் இல்லாத பல இடங்களில் இருக்கலானோம்; இருந்த இடங்களில் நம் எண்ணிக்கையைப் பெருக்கலானோம். கழகம் பரவாத இடத்திலெல்லாம் பரவியிருக்கிறது; வளராத இடங்களிலெல்லாம் வளர்ந்திருக்கிறது. எள்ளி நகையாடியோரும், தள்ளிவைத்தோரும் இன்று நம்மை நோக்கிக் கேட்கின்றனர், "என்ன உங்கள் கருத்து, இந்தச் சிக்கலில் ?" என்று. இது ஒன்றேபோதும் நாம் வளர்ந்திருக்கும் சேதி காட்ட. இந்த வெற்றிக்காக, நாம் கொட்டிய குருதியும், சாமி, தாளமுத்து, பாண்டியன், மசீத், குமாரவேலு, கணேசன் முதலியோர் தந்த உயிரும் கொஞ்ச நஞ்சமல்ல; அதையும் கண்டு இரங்காத நெஞ்சம் நெஞ்சமல்ல ஆக, இவர்களது உழைப்பால்தான் - உயிரால்தான் நாம் நம் கொடியைத் தூக்கிப்பிடித்திருக்கிறோம்.

இன்னல்கள் ஆயிரம் வந்தன; சிக்கல்கள் ஆயிரம் வந்தன; எதிர்ப்புகள் பல்லாயிரம் வந்தன. என்றாலும் நாம் அஞ்சாது போரிடுகிறோம்; வாகை சூடுகிறோம்; வெற்றிப் பண்பாடுகிறோம். **இத்துணைக்கும் அடிப்படையானவர்-தனி ஆற்றலானவர்-நம்மால் மறக்கமுடியாதவர்-அறிஞர் அண்ணா அவர்களே.**

அவர்கட்கு ஆண்டைம்பது நிறைவு பெறுவதும், இத்திங்களில்தான்; கழகம் தனது பத்தாவது ஆண்டைக் கடப்பதும் இத்திங்களில்தான். எனவே இவ்வாண்டு கழகம் தனது விடுதலை நாளை இரட்டிப்புப் பெருமையோடு கொண்டாடுகிறது; அளவிறந்த மகிழ்வோடு கொண்டாடுகிறது.

நெஞ்சையுயர்த்தும் இந்த வெற்றித் திருநாளில் விடுதலைப்-போராட்டப் பெருநாளில் நாம் சொல்லும் சேதி இதுதான் :

"உயிரைப் பெய்தேனும் திராவிடப் பயிரை வளர்ப்போம் !
வாழ்வை இழந்தேனும், திராவிடர் தாழ்வை உடைப்போம் !
கண்மணியாம் கழகத்தைப் பேணி, அடிமையாம் காரிருளைத்
துடைப்போம் !" ★

உருவகம் :

பொம்மலாட்டம்.

மேடையேறிய இரண்டு பொம்மைகளும் ஆடிக்கொண்டே ஒன்றையொன்று நோக்கிப் பேசிக்கொண்டன. இரண்டில் ஒன்று ஆண். மற்றொன்று பெண். சொல்ல வேண்டுமா ? காதல் காவியத்திற்கு ஓவியமாகிவிட்டன அவை.

"அன்பே !" என்றது ஆண்.

"ஆருயிரே !" என்றது பெண்.

"இனி என்னாளும் இன்பமே" என்று கூறிக்கொண்டன ஒன்றுக்கொன்று.

அவை இரண்டிற்கும் இவ்வுலகில் இருப்பதாகவே நினைவில்லை. வான வெளியிலே பறந்து, மேக மண்டலத்திடையே உலாவி, நட்சத்திர மலர்களைச் சூடி, நிலவுத் தேரிலே ஏறி, எல்லையில்லாத இன்ப உலகை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாகக் கருதின.

ஆண் பாடியது.

பெண் ஆடியது.

இரண்டுமே இவ்வுலகை மறந்து விளையாடின.

எதிரே இருந்த மக்கள் வெள்ளம் அவற்றின் கண்களுக்கு முன்னால் காணப்படவில்லை.

"ஒரு கண நேரம்தான் பழகினோம்; என்றாலும் ஓருயிராகி விட்டோம். இனி இந்த ஒட்டுறவை என்னாளும் எவரும் வெட்டிப் பிரிக்கமுடியாது" என்றது ஆண் பொம்மை.

"ஆமத்தான். கண்ணும் கண்ணும் கலந்து காதல் கதை பேசிவிட்ட பிறகு நமக்கே அதைத் தடுக்கப் பலமேது ?" என்றது பெண் பொம்மை.

"ஆகா...என்ன அர்த்தமுள்ள உண்மை, என் இதயத்தின் எதிரொலியாக அல்லவா இருக்கிறாய்" என்றது ஆண் பொம்மை.

"என்னை இமயத்திற்கே அல்லவா ஏற்றுகிறீர்கள்" என்றது பெண் பொம்மை.

"இமயத்திற்கா ? அதைவிட உயர்ந்த இடத்திற்கு அல்லவா ஏற்றி இருக்கிறேன்"

"இதயமாளிகைக்கா ?"

"ஆம்...என் இதயமாளிகைக்கு. அதற்காக எனக்கு..." என்று ஆண் பொம்மை கூறியவாறே பெண் பொம்மையை நோக்கி நெருங்கியது. பெண் பொம்மையின் முகத்திலே நாணம் கவ்வ அடுத்து நடக்கப் போவது என்ன என்பதைப் புரிந்த நிலையில் துவண்டுகொண்டிருந்தது. ஆண் பொம்மை பெண் பொம்மையின் கைகளைத் தாங்கியவாறே அதன் முகத்தை நோக்கித் தன்... அதற்குள்...

"ஐய்யோ அத்தான் ! என்னை யாரோ இழுத்துச் செல்கிறார்கள். என்னைக் காப்பாற்றுங்கள்" என்று கத்தியது பெண் பொம்மை.

"என்ன...? அப்படியா...? இதோ...இதோடி..."என்றது ஆண் பொம்மை. இருந்தாலும் அதன் இடத்திலிருந்து ஒரு அடி கூட அதனால் மேலே எடுத்து வைக்க முடியவில்லை.

"என்ன அப்படியே நிற்கிறீர்கள். என்னைக் காப்பாற்றுங்கள். நான் உங்களவள் அல்லவா ?" என்று மேலும் கத்தியது பெண் பொம்மை.

"என்ன செய்ய ? என் கண்ணே ! என்னை யாரோ கட்டி விட்டார்களே" என்று ஓலமிட்டது ஆண் பொம்மை.

"ஐயோ, நம் காதல் ?" என்று கண்ணீர் சிந்தியது பெண் பொம்மை.

"என்ன செய்வது ? நாம் இந்தச் சிறு நூலால் கட்டப்பட்டிருக்கிறோம்; அதிலிருந்து விடுதலை பெறாமல் காதலிப்பது தவறு என்பதை எண்ணிப் பாராமலே ஒருவருக்கொருவர் இதயத்தைப் பறி கொடுத்துவிட்டோம். இனி மேலாவது வாய்ப்புக் கிடைத்தால் நாம் ஒன்று கூடி வாழ்வோம்" என்று பின்னாலே கட்டப்பட்டுள்ள நூலைக் காட்டியவாறே கூறியது ஆண் பொம்மை.

"இனிமேலா ? தாங்களா அதை நம்புகிறீர்கள்?" என்றது பெண் பொம்மை.

"மனத்திற்கு அமைதி தேட அதைவிடச் சிறந்த வழி இல்லையே, இப்போது" என்றது ஆண் பொம்மை.

இதற்குள் பொம்மைகள் இரண்டையும் இயக்கிக்கொண்டிருந்தவர்கள் விடுவிடுவென்று இழுத்துக்கொண்டார்கள். கூட்டத்திலிருந்தவர்கள் அனைவரும் நல்ல பொம்மலாட்டம் என்று புகழ்ந்தவாறே எழுந்து சென்றனர்.

ஆமாம்; இருவரின் காதல், மற்ற நால்வருக்கு பிடிப்பதில்லை. அதனால் ஈருயிர் அழிவது ஊருக்குத் தெரிவதில்லை. இதுதான் காதல் காவியத்தின் பெருங் கொள்கை !

— கரந்தை. கணேசன்.

காரைக்குடிக் கவியரங்கம்

குறள் நெறிக் குடும்பம்

5. உறவினர்.

●

தென்னாடு தன்னுரிமை பெறுதல் வேண்டித்
தெளிந்துரைத்த நல்லறிஞர் கொள்கை தன்னால்
என்னோடும் உறவாகித் தலைமை தாங்கும்
எழிற்கவிஞ! கவியரங்கம் ஏறி நெஞ்சில்
அன்போடு நாவினிக்கத் தமிழைப் பாடும்
அத்தொழிலால் உறவினர்காள்! திருக்கு றட்குத்
துன்போடு போராடி வெற்றி கண்ட
சுற்றத்தீர்! என்னினத்தீர்! வணங்கு கின்றேன்.

தந்தைவழி தாய்வழியில் உறவு மில்லை;
தம்பிதங்கை அண்ணனென ஒருவ ரில்லை;
எந்தவழி சுற்றினுமோர் பங்கு கேட்கும்
தாயத்தார் எவருமிலை; உறவெ னக்குச்
செந்தமிழ்தான்; அதன்றி மனைவி மக்கள்
உறவினராய்ச் செப்புதற்கிங் கிருக்கின் றார்;
எந்தவழி உறவினரைக் காட்ட வல்லேன்?
இருப்பினுமென் கற்பனையில் காட்டு கின்றேன்.

முப்போகம் விளைகின்ற நன்செய் உண்டு;
முகில்குளிரச் செய்கின்ற தோப்பும் உண்டு;
தப்பாது விளைகின்ற புன்செய் உண்டு;
தங்கநகை துணிமணிகள் அனைத்தும் உண்டு;
துப்பாக்கும் பொழுதத்துப் புகைகள் கூடிச்
சுடர்மறைக்கும் மேகமென நாளுந் தோன்றும்;
அப்போது வருமுறவோர் அடடா! சொல்லில்
அடங்குவதோ? ஆயிரமாம் அதற்கும் மேலாம்.

எங்கிருந்தோ எவரெவரோ வருவார்; வந்திங்
கென்னலமும் மனைநலமும் வினவி நிற்பார்;
தங்கியிருந் ததையெதையோ கதைய ளப்பார்;
தயங்காமல் உறவுரைப்பார்; 'உங்கள் பாட்டன்
தங்கைக்குக் கணவனுடன் பிறந்தான் மாமி
தம்பிக்கும், என்பாட்டி தங்கை மாமன்
பங்காளி மகளுக்கும் மணமு டித்த
பனையூரார் எங்களவர்' என்று சொல்வார்.

இப்படியே உறவுரைத்து வந்து சூழும்
என்சுற்றம் மாநாட்டுக் கூட்டம் ஒக்கும்;
முப்பொழுதும் திருமணத்துக் காலம் போல
மொய்த்திருந்து விருந்துண்பார் ஒலியே கேட்கும்;
ஒப்புரவுப் பண்புணர்ந்தேன் உவந்து நிற்பேன்;
உறவினர்க்கு நடுப்போல நானி ருந்தேன்;
இப்புவியில் இத்துணைபேர் உறவி ருக்க
எனக்கென்ன குறையென்று நிமிர்ந்தி ருந்தேன்.

வானத்து வெண்ணிலவாய் நானி ருப்பேன்
வட்டமிடும் உறவினர்கள் விண்மீன் ஆவர்;
கானத்துப் பழுமரத்தில் கனிகள் உண்ணக்
கடுகிவரும் பறவையினம் போலச் சூழ்வர்;
பூத்தும் தேனீக்கள் கூட்டில் மொய்த்தல்
போற்கிளைஞர் பெருங்குழுவாம் வீட்டில் மொய்ப்பர்;
தேனொத்த வெல்லத்தை மோப்பங் கண்டு
தேடிவரும் எறும்பினத்தின் சாரை போல்வார்.

ஆவணியில் காதணிநாள் நிகழ்த்த எண்ணி
ஆய்ந்தொருநாள் தேர்ந்தெடுத்து நெஞ்சிற் கொண்டு
பாவைநிகர் என்மனையாள் செவியிற் சொல்லப்
பாய்ந்தோடி உறவினர்கள் ஆடி மாதம்
போவதன்முன் தம்குடும்பம் சுற்றம் சூழப்
புகுவார்கள்; திடுக்கிட்டுத் துணையை நோக்கின்
'தேவையிலை இனி அழைப்பு; செலவு மிச்சம்'
என்றுரைப்பாள் தேன்மொழியாள் திகைத்து நிற்பேன்.

சாதியினை ஒழிப்பதுநம் கடமை என்று
தக்கவளைக் கலப்புமணம் செய்து கொண்டேன்;
காதலினால் பூத்தமணம் உறவி னர்க்குக்
கடுகளவும் நறுமணமாய்த் தோன்ற வில்லை;
வேதநெறி பிழையாத அன்னார் என்றன்
வீட்டுக்குள் வந்துவிடின் என்முன் நின்றே
ஏதமிலாச் செயலாற்றும் கொள்கை வீரர்
என்றெல்லாம் பட்டங்கள் வழங்கிச் செல்வார்.

உள்ளொன்றும் புறமொன்றும் பேசி நிற்கும்
உறவினரைப் படைக்கின்ற தெய்வ மாகி
வெள்ளைநிறம் கொண்டிங்கே உலகை ஆட்டி
விளையாடும் பணநாதன் கடைக்கண் நோக்கம்
தள்ளிவிளை யாடுவதால் என்மேற் குற்றம்
துணிந்துரையார் பகைமாற்றி உறவை ஆக்கும்
வெள்ளையப்பர் புரிகின்ற விளையாட் டெல்லாம்
விரித்துரைப்பின் விந்தையினும் விந்தை யன்றோ?

உறவான ஒருவர்திரு மணத்துக் காக
ஒள்ளிழையை மக்களுடன் அழைத்துச் சென்றேன்;
மெருகோடு விளங்குமொரு உந்து வண்டி
விட்டிறங்கி நிற்பதன்முன் மணத்து வீட்டார்
'வருகவரு' கென்றெனக்கு மாலை சூட்டி
வரவேற்ற காட்சியினைக் கண்டோர் அங்கு
வருகின்ற மணமகனோ என்ற யிர்த்து,
வாழ்வரசி அருகிருக்க ஐயம் விட்டார்.

நான்பெற்ற செல்வத்தை எடுத்துக் கொஞ்சி
நலமிக்க கன்னத்தைச் சிவக்க வைத்தார்;
"தேன்பெற்ற சொற்பேசும் சித்தி ரங்கள்
தெளிவாகத் தங்களையே வார்த்தெ டுத்தாற்
போன்றிருக்கக் காண்கின்றோம்" என்று ரைத்தார்;
புதல்வரெலாம் என்மனையாள் போன்றி ருந்தும்
தேன்சொட்டப் புனைந்துரைத்த உறவின் மாந்தர்
திருவிளையாட் டெடுத்துரைத்தல் இயல்வ தொன்றோ?

"தண்ணீரோ வெந்நீரோ குளிப்பதற்கு?
தமக்கென்று தனியறையும் ஒதுக்கி விட்டோம்,
உண்பீரோ இவ்வுணவு? களைத்தி ருப்பீர்!
ஓய்வுகொளத் துயிலுங்கள்!" என்று ரைத்து
மண்மகளைக் காணாமல் விரித்து வைத்த
மலர்மெத்தை, தலையணைகள் காட்டி நின்று
பண்பாடி அருகிருந்து தாளம் போட்டுப்
பல்வரிசை காட்டுகிற உறவு கண்டேன்.

விரைந்துவரும் பொழுதத்துச் சட்டைப் பொத்தான்
விட்டுவந்தேன்; உறவினர்கள் அதனைக் கண்டு
மறைந்திருந்து பேசுகின்றார் "அடடா இந்த
மனிதரிடம் எளிமையைத்தான் காண்பீர்! செல்வம்
நிறைந்தவர்கள் இப்படித்தான் இருத்தல் வேண்டும்
நிறைகுடங்கள் எப்போதும் ததும்பா தன்றோ?
குறைந்தவர்கள் கூத்தடிப்பார்" என்று தம்முள்
கூறுவது செவியில்விழ நகைத்துக் கொண்டேன்.

பின்னாளில் வணிகத்தில் நட்டங் கண்டேன்;
சேர்ந்தடித்த பெரும்புயலால் வயல்கள் கெட்டேன்;
பொன்னகைகள் மாளிகைகள் ஒத்தி வைத்தேன்;
பொருள்முட்டுப் பாடடைந்து துயரில் நொந்தேன்;
எந்நாளும் என்வீட்டில் உண்டு வந்த
எண்ணில்லா உறவினரைக் காண வில்லை;
பின்னோடித் தேடினுமே அஞ்ச லென்று
பேசுதற்கோர் ஆளில்லை தனித்து நின்றேன்.

பணநாதன் அருளில்லாக் கார ணத்தால்
பறவைகளாய்ப் பறந்தோடி விட்டார்; மேலும்
கணமாக வந்திருந்து எறும்பு போலக்
கடித்தார்கள்; கலப்புமணம் பழித்து ரைத்தார்;
குணமில்லாத் தேனீயாய்க் கொட்டி னார்கள்;
கூடிவருங் காலத்துக் கூடி வந்தார்;
துணையாக வளைந்திருந்தார்; செல்வம் போகித்
துயருறுங்கால் நடுப்போல வளைத்து விட்டார்.

— 10-ம் பக்கம் —

நிலவும் கடலும்

[நிலவானது முழு ஒளிபெற்ற நாள்; கிழக்கிலிருந்து எழுந்து வானிடை வளர்ந்து வருகின்றது. கடலானது காதல் வேட்கையால் முழு மதியைத் தழுவுதற்கு முயலுகிறது. ஆனால் நிலவுப் பெண்ணோ எள்ளி நகையாடுகிருள். இறுதியில் கடலும் அதனுடன் சொற்போர் புரிகிறது. பாருங்களேன், அப்போர்த் திறனை.]

நிலவு: கடற்கரையே! பன்னெடுங் காலமாகப் பகர்ந்து வருகிறேன். ஆனால் நீயோ உன் வெறிச் செயலை நெறியற்ற முறையிலே வெளிப்படுத்துகிருய். ஏன்? இங்ஙனம் உன் அலைக்கைகளை அகல விரித்து என்னைத் தழுவுதற்குக் கூச்சலுடன் ஓடி வருகிருய். எட்டாத கனி நான். என்னை, எண்ணி-எண்ணி இன்னலை ஏற்கின்ருயே. பரிதாபத்திற்குரியவனே, பண்பற்றவனே.

கடல்: ஆம்...கண்ணே! உன் முத்தம் பெறுதலால் பித்தனுக்கப் பட்டேன். கட்டாணி முத்தழகி, என் கருத்திலே பொருந்திய அழகு முகத் தழகி, இன்பந்தர வாராய்!

வானத் தடாகத்தில் வளர்ந்து வரும் வண்ணமலர்க் கொடியே! வாடி-வதங்குகின்றேன். என்னை நாடி வந்து கூடாயோ? நிறைக்கலசமே! வழகி! அன்ன நடையிலும் சின்ன நடை பயிலும் சிங்காரி! மோகனப் புன்னகையால் என் காதல் தீர்க்க ஓடி வா...வா...வா...

நிலவு: அறிவற்றவனே! என் மாசுபடியாக் கற்புக்குத் தூசு தடவ எண்ணும் தூய்மையற்றவனே! கருநிறம் உடையவனே! கள்ள உள்ளத்தவனே! இழிவான வார்த்தைகளை இலக்கியமாகாதே! உன் அலைக்கைகளை அடக்கிக்கொள். உன் ஆசைக்கு அணைபோட்டுத் தடுத்துக்கொள். வேசியல்ல நான். உன் விருப்பத்திற்கு இணங்க (என்று கூறிவிட்டுக் கோபப்பார்வையை வீசுகிறது.)

கடல்: நீலவானத்திலிருந்து தேன்சொட்டும் தேன்கூடே! வானுக்கு வனப்பளிக்க வந்த வளர்மதி மங்கையே! நீ உதிர்க்கும் அமுதத்துளிகள், கொப்பளிக்கும் என் குருதியை குளிர்க்க தன்மைக்கு அழைத்துச் செல்கின்றன. உன் அனல் கக்கும் பார்வையும், கனல் கக்கும் சொல்லும், புனல் தன்மையைப் புகுத்துகின்றன. உன் வன் சொல்லம்பு என் இதயத்திலே மொய்த்து வெந்தபுண் பெற்றியைத் தரவில்லை, மாருக சந்தனத்தின் குளிர்ச்சியைக் கொட்டுகிறது. ஆகவே வட்ட வடிவழகி,வாட்டம் தீர்க்க ஓடிவாராய்!

நிலவு: [முன்பு இருந்த நிலையை விடச் சற்று வானத்திலே நகர்ந்துள்ளது. கடல் உரையைக் கேட்டவுடன் மிக்க கோபம் அடைந்து பேசுகிறது.]

சிந்தனைத் தெளிவற்றவனே! செந்தனலை மூட்டுகிருய் மான உணர்ச்சியற்றவனே! மனித உணர்விற்குச் சாவுமணி தேடுகிருய்! மதம்பிடித்த யானையையும் நல்லதாக்கும் மமதையாளனே! கனி இருக்கக் காய் வேண்டும் கசடனே! கலையெண் பதினுறுடைய பைந்தொடியாளைப் படுக்கையறைப் பதுமையாக்க, வலை விரிக்க என்னை எரிமலையாக்காதே!

கடல்: வானவீதியிலே பவனி வரும் வெண்ணிற மணிவிளக்கே! சங்கத்தமிழ் இனிமையுடைத்து,என்று சான்ருேர்கள் தீட்டுகின்றனர். ஆனால் நீயோ சங்கத்தமிழ் இனிமையையும் மங்க வைக்கின்ருய்! கலையுடையவள் என்று கூறுகிருய். என்னைக் கூடாவிடில் அது, உனக்குக் களங்கமாகவே விளங்கி நிற்கும். ஆடலழகியை ஆணழகன் விரும்புவது இயற்கை என்று இயற்கைத்தாய் இலக்கணம் வரைகின்ருள். நங்கையும், நம்பியும் இணையும் இடத்தில் தானே "காதல்" என்ற சொல் இன்பம் என்ற பெயர் சூடுகிறது. மேகத்தை முக்காடாக்கி, ஒளி முகத்தை ஒளிக்கும் ஒளிப்பிழம்பே! ஏன் நகர்ந்து செல்கிருய்? உன் ஒளிக்கைகளைத்தா! இதோ என் அலைக்கைகள்.

புகழ்பெற்று, விண்ணில் மிதந்து, தண்கதிர் தரும் மின்னொளியே! ஏன் தயங்குகின்ருய்? உன் தாரகை ஆயக்கூட்டத்தார் தடை விதிப்பார்களென்று? கொஞ்சு மொழியாளே! அதோ பார் விண்மீன் கூட்டங்கள் ஆதரவு வார்த்தைகளை அள்ளித் தருகின்றன. நாம் காதலர் ஆவதற்கு பொருத்தமுடையவர் என்று சொல்லாமல் சொல்லுகின்றன. ஆனால் நீயோ என்னை.. அவைதம் இமை விழியால் நமது காதலுக்கு இசை பாடுகின்றன. பரந்தவானிலே கலை பரப்பும் காரிகையே, உன் செவ்விதழுடன் என் கருவிதழ் பதித்தால் இன்பம் கொள்ளை.....கொள்ளை.... ஆடையின்றி ஆடிவரும் அழகு மொழியாளே! செஞ்சொற்தர வா... வா.

நிலவு: அழகான சொல் அடுக்கால் இழிவான பொருள் விளக்கும் வேலையாரே (கடலாரே). வெண்டாமரைக் குளத்திற்கு எருமைபோல், என் கற்புக்குக் களங்கம் தேடும் கலங்கிய மதியுடையோனே!

"என்னை வேண்டாதே! விரும்பாதே!" என்று விளம்பி வருகின்றேனே! பெண்களைக் கண்டவுடன் கண்களைச் சுழற்றிவிடும் ஆடவர் வாழும் அவனிக்கு அரசுக அமைந்தவனே! உப்புத் தன்மையுடையோனே! கேளாய்! ஒப்புதல் தாரேன். காரணம் பல. அவற்றுள் சில:

வான நகரத்தில் வட்டமிடும் இராணி நான்; எங்கும் கதிர்பரப்பும் ஏந்திழையாள் நான்; உலகத்து மக்களுக்கு ஒருத்தி நான்; கவிஞர்களின் எழுதுகோலுக்குக் கவின் தரும் பண்பினள் யான்; இருள் அழிக்கும் ஏற்றம் பெற்றவள் யான்.

பகலவனின் வெள்ளொளியால் வருந்தமுறும் உலகத்தவர் எனது தண்ணொளியில் இன்பம் பெறுகின்றனர். என்னை அடைவதற்கு ஏற்றவர்கள் எங்குமே இல்லை. நீயோ எண்ணற்ற உயிர்களை உன் அலைக்கைகளால் நசுக்கி நாசமாக்குகின்ருய்; ஆகவே நீ உயிர் குடிக்கும் பாவி. இத்தகைய கொடிய செயல்களை மேவி இருப்பதால், என் ஆவி உள்ளமட்டும் உன்னை அணுகேன்... அணையேன்!

கடல்: [இவைகளைக் கேட்ட கடலுக்கோ அவமானம் தாங்கமுடியவில்லை. கோபத்தால் கொந்தளித்துப் பேசுகிறது.]

அன்பே! இன்பமே! என்றேன். நீயோ வேதனை வார்த்தைகளை என் மீது இரைக்கின்ருய். உன் சரிதத்தின் வரிகளை ஆய்ந்து பார். இப்போது சிறப்புப் பெற்றுவிட்டோம் என்று சீறுகின்ருய்! என்னைக் கயவன் என்று கூறுகின்ருய்! இகழ் மாரி பொழியும் சந்திரபிம்பமே! என் புகழ் சற்று கேளாய்!

முத்துக்கு முதலிடம் நான்; எத்திக்கும் எழில் கொழிக்க, பசுந் தழைகள் தழைக்க, உலக மக்கள் உய்ய, கலம் செலுத்த, வெய்யவனின் வெம்மை தணிய, மேலே மேகக் கூட்டத்தைச் சமைத்து மழை பெய்விக்கின்றேன் இப்பரந்த பாருக்கு நான்தான் பாதுகாவலன். சுருங்கக் கூறுகின்றேன். என்னைப்பற்றி வருணனை வரைய வார்த்தைகளே இல்லை.

நிலவு: ஏமாற்று மலர் எடுத்து புகழ்மாலை சூடிய பரவையரே! விஞ்ஞானக் காலத்திலும் அஞ்ஞானக் கருத்தால் அவதியுறும் உலகத்தவனே, அழகிய பண்பின் அடிச்சுவட்டிலே ஒழுகிவரும் உலகத்தவருக்கு உற்ற நண்பனே, பகுத்தறிவு இருந்தும் நல்லன கொண்டு,அல்லன விளக்கும் ஆற்றலற்றவர்களுக்கு வுன்பனே, என் சரிதம் தவறு... தவறு. விஞ்ஞானப் புதுமையாளர்களிடம் என்னைப்பற்றிய விளுக்களைத் தொடுத்துப்பார். என் பெருமையை-என் பண்பை-என் நிலையை தெற்றென விளக்கிக் காட்டுவர். புராணக் கயிற்ருல் என்னை நீ வளைத்தாலும், உன் நிலையும் அங்ஙனமே! அப்போது உணர்ச்சிக் குதிரை பூட்டி, போரா நடத்திறுய்! உன்னை உணர்-பின்னைப் பிறரைப்பற்றி ஆய்!

கடல்: கடுஞ் சொற்களால் கட்டுரைத்தவளே! திங்கள் ஒரு முறை தேய்ந்து திரும்பும் திங்களே! பரிதிக்குப் பயந்துதானே பகலிலே வராது, இரவிலே வட்டமிடுகிருய்! பிரிந்த காதலர்க்கு பெருந் துன்பத்தை அள்ளித் தருகின்ருய்!

[இந்த நேரத்தில் கருநிறக் கொண்டல் கூட்டங்கள் நிலவை மறைத்து விடுகின்றன. சில நிமிடங்களுக்குப் பிறகு நிலவு தென்படுகின்றது. கடல் சிரித்துக்கொண்டே பேசுகிறது.]

கடல்: பெருமைக்குப் பிறப்பிடம், பெண்ணுலகத்திலகம் என்று நல்லுரை தந்தவளே, எனது சொற்களுக்கு விடையிறுக்க முடியாததால் தானே, அந்தக் கார்மேகக் கூட்டத்திடம் சொல் கடன் கேட்கின்ருய்! சொந்தமே உனக்குக் கிடையாதோ; வந்த மஞ்சுக் கூட்டத்திடம் வார்த்தைகளைக் கெஞ்சிக் கேட்கின்ருய்.

நிலவு: அயலாரின் சிந்தனை இயந்திரம் எழுப்பிய சொல்மாடத்திலே வாழும் பண்பு என்னிடம் இல்லை. நண்ப, நும் உலகத்தில்தான் மாற்ருர் பொருளைத் தனதாக்கிக் கொள்வர். உமது நெறியற்ற அனுத்திரளாம் ஒலிக்கூட்டம் மேகங்களின் செவிப் பறைகளைத் துளைத்தனவாம். கடலார் கொக்கரிக்கின்ருரே காரணம் யாதோ? என்ற விளுவுடன் விரைந்தன, என்னிடம். உன் இழி தன்மையை இயம்பினேன். வெட்கம்...வெட்கம்... என்ற தொடர்களைச் சிந்திவிட்டுச் சென்றன (என்று கூறிக்கொண்டே மேற்கில் சாய்ந்து ஓடிக்கொண்டிருக்கிறது.)

கடல்: கசப்பு மொழி உதிர்க்கும் பெண்ணே! பெண்ணறிவு மண்ணறிவு என்பதை உணர்ந்தேன். அந்த நீலவண்ண மேகக் கூட்டங்கள் என்னுல் எழுப்பப்பட்டவை. உன் நிலையறிய வந்த தூதுவர்கள். இது தெரியாமற் போனுயே தெரிவையே! (இதைக் கேட்ட நிலவுக்குச் சிறிது வெட்கமே என்ருலும், நாம் மேகக் கூட்டத்திடம் யாதும் இரவல் வாங்கவில்லையே என்று நினைத்து ஆறுதலடைகிறது.)

நிலவு: ஏமாற்றிவிட்டோம் என்று இறுமாப்பில் உழல்பவனே! ஏமாந்தது யார்? இதோ பார் உன் நினைப்பிற்கும் எட்டாத நெடுந் தொலைவு சென்றுவிட்டேன். வகை தெரியாது வாய்ப்போர் தொடுத்த வன்மைக் குணமுடையவனே! வெற்றி மங்கையாக, வீராங்கனையாகச் சென்றுவிட்டேன்... நீ, செத்துக்கொண்டே போ...அழிந்துபோ... (என்று கூறிவிட்டு மறைந்துவிடுகிறது. இது கடலின் காதுகளுக்கு எட்டவில்லை. தன் மனதுக்குள் நாளை வருவாள்,ஆரத்தழுவி காதல் சோர்வு தளரவேண்டும் என்ற எண்ணத்துடன், அலைக்கரங்களால் ஓசை எழுப்பிக்கொண்டிருக்கின்றன.

இதே நேரத்தில் அதனுல் எழுப்பப் பட்ட மேகக்கூட்டங்கள் விண்ணில் தொங்கியவாறு கண்ணீர் (மழை) உகுக்கின்றன. அதன் பொருள் என்னவென்று கடலுக்குத்தானே புரியும்.)

-சா. பெ. மலைச்சாமி.

அலமேலு அப்பாத்துரையார்.

வரும் 20-9-59 அன்று விக்கிரமசிங்கபுரத்தில் நடைபெறும் தி. மு. கழகக் கூட்டத்தில் திருமதி **அலமேலு அப்பாத்துரையார்** (சென்னை மாநகராட்சி உறுப்பினர்) அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

"தாய் நாடு" இதழ் குறித்து ஒரு முக்கிய வேண்டுகோள்.

அன்புடையீர்,

வணக்கம். எனக்கு ஏற்பட்டுள்ள தவிர்க்க முடியாத சில முக்கிய அலுவல்கள் காரணமாக, செப்டம்பர் 17-ந் தேதி தொடங்கப்பட இருந்த "தாய் நாடு" இதழ், டிசம்பர் மாதத்திலிருந்து வெளிவரும் நிலை ஏற்பட்டுள்ளது. தயைகூர்ந்து இந்தக் காலதாமதத்துக்கு மன்னிக்குமாறு வேண்டுகிறேன்.

அன்புள்ள
டி. கே. சீனிவாசன்
11-9-'59.

"திரவிடம்"- தென் சொல்லின் திரிபே

அங்கம், வங்கம், கலிங்கம், திராவிடம்- "அம்" ஈறுபெற்றன நாடுகளின் பெயர்கள். கால்டுவெல் காட்டிய மேற்கோளும் தாயுமானவர் பாடிய பாடலும். தமிழ் திரிந்த வழியும் வழங்கிய முறையும்.

'திரவிடம்' அல்லது 'திராவிடம்' என்னும் சொல் எம்மொழியது என்பது இன்னும் பலர்க்குத் தெரியாதிருப்பதானும், அண்மையில் அது பற்றி ஓர் ஐயவினு 'தென்றலில்' தோன்றியதானும் அம்மயக்கை அறவே அறுத்தற்கு எழுந்ததிக் கட்டுரை.

நாட்டுப் பெயர்களும் மொழிப் பெயர்களும் பண்டைக் காலத்து 'அம்' ஈறுபெற்றே வழங்கின என்பது,

> "அங்கம் வங்கம் கலிங்கம்
> கௌசிகம்
> சிந்து சோனகம் திரவிடம்
> சிங்களம்
> மகதம் கோசலம் மராடம்
> கொங்கணம்
> துளுவம் சாவகம் சீனம்
> காம்போசம்
> பருணம்பப் பரமெனப்
> பதினெண் பாடை."

என்னும் திவாகர நூற்பாவும்,

> "சிங்களம் சோனகம் சாவகம்
> சீனம் துளுக்குடகம்
> கொங்கணம் கன்னடம்
> கொல்லம் தெலுங்கம்
> கலிங்கம் வங்கம்
> கங்கம் மகதம் கடாரம்
> கவுடம் கடுங்குசலம்
> தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி
> னேழ்புவி தாமிவையே."

என்னும் பழஞ்செய்யுளும் உணர்த்தும்.

இம்முறைபற்றித் தமிழும் தமிழம் என வழங்கிற்று. இதனுனேயே, ஈறுகெட்ட மகரவீற்றுப் புணர்ச்சியாக, 'தமிழப்பிள்ளை', 'தமிழநாகன்', 'தமிழவரையன்' முதலிய புணர்மொழிகளும் தோன்றின.

நன்னூலார் இவற்றைத் 'தமிழ்' என்னும் நிலைமொழி அகரச் சாரியை பெற்றுப் புணர்ந்ததென்றும், தொல்காப்பியர் அம்மொழி அக்குச் சாரியை பெற்றுப்புணர்ந்ததென்றும், கூறினர். இவர் கூற்றின்படி, 'கொங்கவண்ணன்' என்பதைக் 'கொங்கு' என்னும் நிலைமொழி அகர அல்லது அக்குச் சாரியை பெற்றுப் புணர்ந்ததாகவும், 'துளுவ வேளாளன்' என்பதைத் 'துளு' என்னும் நிலைமொழி அவ்வாறு புணர்ந்ததாகவும், கொள்ளவேண்டி வருமாதலின், அது பொருந்தாதென விடுக்க.

'தமிழ்' என்னும் சொல் முதலாவது வடமொழியில் திரிந்த வடிவம் 'த்ரமிளம்' என்பதே. ழகரம் வடமொழியிலின்மையாலும் உயிர்மெய்ம் முதலை மெய்ம்முதலாக்கி ரகரத்தை வழிச்செருகல் அம்மொழிக்கியல்பாதலானும், அச்சொல் அம்மொழியில் அவ்வடிவை அடைந்ததென்க.

"திரமிளம் என்பது தமிழ் எனத் திரிதலுமது" என்று பிரயோக விவேக நூலார் (பக். 4) தலைகீழாகக் கூறிய கூற்றில், அவ்வடிவே ஆளப்பெறுதல் காண்க.

தாரநாதர் திபேத்தில் எழுதிய 'இந்தியாவில் புத்தமதத்தைப் பரப்பின வரலாறு' (கி. பி. 1573) என்னும் நூலில் 'த்ரமில' (Dramilas) என்னும் வடிவமே உள்ளதென்பர் கால்டுவெல். புராணங்களின் பழைய மலையாள மொழிபெயர்ப்புகளிலெல்லாம் இவ்வடிவே பெருவழக்காயிருப்பதாகக் குண்டர்ட்டுக் கூறுவதாகவும் அவர் எடுத்துரைப்பர்.

திரமிளம் என்னும் சொல்லிற்கு, (1) பஞ்சதிராவிட தேசங்கள், (2) தமிழ், என இருபொருள் கூறும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியும்.

த்ரமிளம் என்பது பின்பு த்ரமிடம் எனத் திரிந்தது. த்ரமிடம் என்பதும் சிறிது காலத்தின் பின் த்ரவிடம் எனத் திரியலாயிற்று. இவ் இறுதி வடிவத்தின் நீட்சியே த்ராவிடம் என்பது. இது தமிழில் திராவிடம் என்ருகும்.

த்ரமிளம், த்ரமிடம், த்ரவிடம் என்னும் ரகரஞ் செருகிய வடிவுகளெல்லாம், வடமொழி வழக்கேயன்றிப் பிறமொழி அல்லது பிறநாட்டு வழக்கல்ல. பிறமொழிகளெல்லாம் தமிழிற்போல் ரகரமற்ற வடிவே வழங்கும்.

கி. பி. 7-ம் நூற்ருண்டில் இந்தியாவிற்கு வந்த இவென் திசாங் (Hwen Thsang) என்னும் சீன வழிப்போக்கர் குறிப்பில், 'சிமொலொ' (Tchi mo-lo) என்னும் வடிவம் உள்ளது. இதைத் 'திமல' (Dimala) அல்லது 'திமர' (Dimara) என்றும் படிக்கலாம் என்பர் கால்டுவெல். பாலிமொழியிலுள்ள மகாவமிசம் (Mahavanso) என்னும் இலங்கை வரலாற்றில், 'தமிலொ' (Damilo) என்னும் வடிவம் உள்ளது. ஐரோப்பியர் பொதுவாகத் 'தமுல்' (Tamul) என்றனர் அவருள் தேனியவிடையூழியர் (Danish Missionaries) மட்டும் 'தமுலிக்க மொழி' (Lingua Damulica) என அழைத்தனர். ஆங்கிலத்தில் 'தமில்' (Tamil) என்னும் வடிவம் வழங்குகின்றது. தமிழகம் என்னும் பெயர், மேனுட்டுப் பழைய தேசப்படங்களிலும் ஞால நூற் சுவடிகளிலும 'தமிரிக்கெ' (Damirice) என்றும், 'திமிரிக்க' (Dimirica) என்றும் வழங்கப்பட்டுள்ளது.

முழுகிப்போன குமரிக்கண்டத்தில் கி. மு. (ஏறத்தாழ) ஐம்பதினுயிரம் ஆண்டுகட்குமுன் முளைத்தெழுந்ததும், திராவிட மொழிகட்கெல்லாந் தாயுமான பழந்தமிழ், ஒரு காலத்தில் பனிமலை (இமயம்) வரை பரவியிருந்ததாலும், கி. மு. 1000 ஆண்டுகட்குப் பின்னரே தெலுங்கு முதலிய திரவிடமொழிகள் அதனின்று கிளைத்ததாலும், அவற்றுள்ளும் ஒரு மொழியிலும் கி. பி. 9-ம் நூற்ருண்டிற்கு முன் இலக்கியந் தோன்ருமையாலும், திராவிடம் என்னும் பெயர் தமிழையும் தமிழினத்தையும் தமிழ்நாட்டையுமே முதற்காலத்தில் குறித்து நின்றது. தமிழினின்று திராவிட மொழிகள் கிளைத்த பின்பும், திராவிடம் என்னும் சொல் தமிழைத் தனிப்படக் குறிக்கும் வழக்கும் கால்டுவெல் காலம் வரை தொடர்ந்து வந்திருந்ததாகத் தெரிகின்றது.

பிள்ளை லோகாரிய சீயர் (500 ஆண்டுகட்குமுன்),

> "நெஞ்சுக் கிருள்கடி தீபம்
> அடங்கா நெடும்பிறவி
> நஞ்சுக்கு நல்ல அமுதம்
> தமிழநன் னூற்றுறைகள்
> அஞ்சுக் கிலக்கியம் ஆரண
> சாரம் பரசமயப்
> பஞ்சுக் கனலின் பொறிபர
> காலன் பனுவல்களே,"

என்ற பெரிய திருமொழிச் சிறப்புப் பாயிரத்தில், "தமிழ நன்னூற்றுறைகளஞ்சுக்கு" என்பதன் பொருளை விளக்குமிடத்து, "திராவிட சாஸ்திரம், எழுத்துசொல் பொருள் யாப்பு அலங்காரம் என்கிற விலக்ஷணமான பஞ்சலக்ஷணத்தோடே கூடியிறே நிற்பது." என வரைந்திருக்கின்ருர்.

18-ஆம் நூற்ருண்டில் திருச்சிராப்பள்ளியில் வாழ்ந்திருந்த தாயுமான அடிகள் பாடிய "கல்லாத பேர்களே நல்லவர்கள்" என்னும் செய்யுளில்,

> "..........வடமொழியிலே
> வல்லான் ஒருத்தன்வர
> வுந்திரா விடத்திலே
> வந்ததா விவகரிப்பேன்
> வல்லதமி ழறிஞர்வரின்
> அங்ஙனே வடமொழியில்
> வசனங்கள் சிறிதுபுகல்
> வேன்"

என்னும் பகுதியில், 'திராவிடம்' 'தமிழ்' என்னும் இரு சொல்லும் ஒரு மொழியையே குறிக்கின்றன.

ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிரத் தெய்வப் பனுவல், தமிழ் வேதம், திராவிட வேதம், திராவிடப்

பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர்

பிரபந்தம் என்னும் பெயர்களால் வழங்குகின்றது.

பாகவத புராணத்தில், சத்திய விரதன் என்னும் பெயராற் குறிக்கப்படும் ஒரு தமிழரசன் திராவிடபதி எனப்படுகின்ருன். திராவிடம் என்னும் சொல்லுக்கு, தமிழ்நாடு என்னும் பொருளும் அகராதிகளிற் குறிக்கப்பட்டுள்ளது.

ஆரியர் இந்தியாவிற் குடிபுகுந்து வட இந்தியா முழுதும் பரவியபின், குமரிலபட்டர் காலம் (7-ஆம் நூ.) வரை தென்னுடும் தென்னுட்டு மக்களினங்களும் அவை பேசிய மொழிகளும், தமிழின் தலைமைபற்றி, திராவிடம் என்றே அழைக்கப்பட்டு வந்தன.

மனு, தம் (ஆரிய) அறநூலில் (10:43,44) ஆரியரல்லாத பல்வேறு இனத்தாரைக்குறிக் குமிடத்து, தமிழரையும் தெலுங்கர் முதலிய திராவிடரையும் வேறுபடுத்தாது அவரெல்லாரையும் ஒருங்கே தழுவுமாறு, திராவிடர் என்னும் சொல்லையே ஆண்டிருக்கின்ருர்.

விந்திய மலைக்குத் தெற்கில் வந்து குடியேறிய பிராமணரும், திராவிடப் பிராமணர் எனப்பட்டனர். இது நாடுபற்றியதேயன்றி இனம்பற்றியதன்று. மலேயாத் தமிழர், தென்னுப்பிரிக்கத் தமிழர் என்னும் வழக்கை நோக்குக. இம்முறைபற்றியே, தேவார மூவருள் ஒருவரான திருஞானசம்பந்தரும் திராவிட சிசு எனப்பட்டார்.

வடநாட்டு மொழி நூலறிஞர், முதற்கண், (ஆரிய) வேத காலத்து இந்திய வட்டார மொழிகளைச் சமற்கிருதத்திற்கு முந்தியுண்மைபற்றிப் பிராகிருதம் என அழைத்தனர். அவற்றில் அளவிறந்த ஆரியச் சொற்கள் கலந்து சிதைந்த வடிவிற் காணப்படுவதுபற்றி, பிற்காலத்தார் அம்மொழிகளை வடமொழி (சமற்கிருத) வழியினவாகப் பிறழவுணர்ந்தனர். இதே காரணம்பற்றி, பழஞ் சேரநாட்டுத் தமிழ்த் திரிபாகிய மலையாளத்தை வடமொழியினின்று வந்ததாக இன்று சிலர் கூறுவது காண்க.

கி. மு. 3-ஆம் நூற்ருண்டினராகக் கருதப்படும் காத்தியாயனர், பைசாசி, சௌரசேனி, மாகதி, மகாராட்டிரி எனப் பிராகிருத மொழிகளை நான்காகவே கொண்டனர். திராவிடத்தைஅவர் கொள்ளாதது அறியாமையோ புறக்கணிப்போ அறிகிலம்.

— 8-ம் பக்கம் —

கவிஞர்கள் சுற்றுலா.

அன்புடையீர்,

வணக்கம். மேற்படிக் கழகத்தின் சார்பில், இன்றைய எழுத்தாளர்களில் கவிதை புனைந்து கவின்பெற்றுத் திகழும் கவிஞர்களைக்கொண்டு ஒரு சுற்றுப் பயணம் துவக்குவதாகத் திட்டமிட்டுள்ளோம்.

24-10-'59 சனி அன்று காலை எட்டு மணிக்கு முன்னதாக ஒய். எம். சி. ஏ. எஸ்பிளனேட் கட்டிடத்தின்முன் குழுமி, அங்கிருந்து சரியாக எட்டு மணி அளவில் சுற்றுலா துவக்கி மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம்வரை சென்று வருவது என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இன்றைய இளங் கவிஞர்களுக்கு முதுபெரும் புலவர்கள் ஆக்கந்தர வேண்டும் என்பதற்காகவும், கவிஞர்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து உறவுமுறை காண வேண்டும் என்பதற்காகவுமே இக்கவிஞர்கள் சுற்றுலாவை ஏற்படுத்தி உள்ளோம். அச்சுற்றுலாவில் **பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதன்**, எம். ஏ., பிஎச். டி., எம். எல். சி., **கண்ணதாசன், கவிஞர் மீ. ப. சோமசுந்தரம், அழ. வள்ளியப்பா** முதலியோர் பங்குபெறுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிருேம்.

எனவே இச்சுற்றுலாவில் பங்குபெறும் கவிஞர்கள் தலைக்கு ஐந்து ரூபாய் கட்ட வேண்டும். விருப்பமுள்ளவர்கள் இம்மாத இறுதிக்குள் (30-9-59) தங்கள் பெயரையும் முழு முகவரியையும் **"செயலாளர்: நக்கீரர் கழகம், 27, கொண்டலையர் தெரு, சென்னை-1."** என்ற முகவரிக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிருேம்.

—**நக்கீரர் கழகம்.**

தமிழகத்தின் தளபதி!

"அண்ணா"

எதிர்கால திராவிடத்தின் தோற்றமும், ஏற்றமும் இந்த மூன்றெழுத்துக்குள்தான் முளை விடுகின்றன.

உயிர் - மெய் - உயிர்மெய் என்ற முப்பெரும் வகையில் தமிழ் எழுத்துக்கள் அத்தனையும் அடங்குகின்றன. "அண்ணா" என்ற பொன்னானசொல்லில் (அ - உயிர்; ண் - மெய்; ணா - உயிர்மெய்.) தமிழ் எழுத்துக்களின் வகை மூன்றும்அடங்குவன. தமிழகத்தின் - திராவிடத்தின் தலைவிதியே அடங்கி நிற்கிறது. நான் அறிந்தவற்றுள் ஒருசில மட்டும் கூறுகிறேன். அன்றும்-இன்றும் - என்றும் 'அண்ணா'வின் தலைமை தமிழகத்தைக் கவர்ந்த - கவரும் நிலைபெற்ற நிகழ்ச்சி; ஒரு வரலாற்றுப் பொன்னேடு!

சொல்லின்செல்வர்.

"தாழ்ந்த தமிழ்நாட்டை"த் தன் சொல்வன்மையால் உயர்த்தியவர் "அண்ணா"! "ஆரியமாயை"யை அலசிக் காட்டியவர் அண்ணா! "நாட்டையும்" ஏட்டையும் ஒப்பிட்டு உருவகப்பருத்திக் காட்டியவர் 'அண்ணா'! நமக்கு-நாட்டுக்கு 'நல்ல தீர்ப்பை'த் தந்தவர் அண்ணா! அவருடைய பேச்சைக் கேட்டவர் 'மகுடி' கேட்ட நாகமாய் விடுவார்கள்.

"கேட்டார்ப் பிணிக்குந்
தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

என்ற வள்ளுவன் குறளுக்கு இலக்கணமாக வாழும் பேரறிஞர் அண்ணா! தமிழ் எழுத்தாளர் மாநாட்டிலே அன்று அண்ணா செய்த முழக்கம் இன்றும் பலர் நெஞ்சிலே நின்று நடமாடுகிறது.

"எழுத்தாளர்களாகிய நீங்கள் காகுத்தனைப் பற்றி எழுதவேண்டியதில்லை-கர்நாட்டிக் மில்லிலே இரத்த வியர்வை சிந்தும் தொழிலாளிகளைப் பற்றி எழுதுங்கள்! மிதிலையிலேயுள்ள ஜனகனின் மாளிகையைப் பற்றி எழுதவேண்டியதில்லை. ஆலைகளிலே வேலை செய்பவர்களுடைய ஓலைக் குடிசைகளைப் பற்றி எழுதுங்கள்! அசோகவனத்தில் சீதை விட்ட கண்ணீர் பற்றி எழுதவேண்டியதில்லை. ஆலமரத்தடியிலும், வேப்பமரத்தடியிலும் காய்ந்து கருகிக் கண்ணீர்விடும் கருப்பாயியைப் பற்றி எழுதுங்கள் என்று முழக்கிய பேச்சு, அன்றைய அமைச்சர் அவினாசிலிங்கனார் மேடையிலேயே'அண்ணா'வைக் கட்டித் தழுவும்படி செய்துவிட்டது.

எழுத்துவேந்தன்.

அண்ணாவின் எழுத்தும் பேச்சும் படிக்கப் படிக்க, கேட்கக் கேட்க ஆவலைத் தூண்டும்! சிரிக்கவும் வைக்கும் - சிந்திக்கவும் வைக்கும். எழுத்தாளர்களின் வகையையும் தொகையையும் பற்றிய 'வீரன்-பரதன்' என்று அவர் எழுதிய உரையாடல் கட்டுரை இன்றும் படித்து இன்புறத்தக்கது. குதிரையைப்பற்றி ஒரு கட்டுரை வரையும் எழுத்தாளர்களை வகைப்படுத்துகிறார்... பாருங்கள் :-

1. "ப்யூசி பாலஸ்" காலம் முதற்கொண்டு புகழ்பெற்ற குதிரையே!- **அலக்சாண்டர் ஏறிவந்த குதிரை "ப்யூசிபாலஸ்" என்றறிந்த வரலாற்று எழுத்தாளன்.**

2. குதிரையே, நீவாழி! எம்பிரானின் அருளை மாணிக்கவாசகப் பெருந்தகைக்கு அளித்த பரியே நீவாழி... **புராண எழுத்தாளன்.**

3. தாலியறுத்த நீலியே! குடிகெடுக்கும்பேயே! மூளியே-போ-போ இல்லை - **இண்டிரேசில் பணம் பறிகொடுத்த எழுத்தாளன்.**

4. குதிரை-வேகமாக ஓடும் நாலு கால் பிராணி. நான்கு கால்கள்-மயிரடர்ந்த வால்-கொம்பு இல்லை.

சாதாரண எழுத்தாளன்.

இது மட்டுமல்ல......இன்னொரு வகையும் 'அண்ணா' காட்டுகிறார், படியுங்கள்.

1. மோட்சமாவது - நரகமாவது... ஒன்றுமில்லை என்று கூறுவர். அடுத்த அடியிலேயே சருக்கிவிடுவார். அருளே மோட்சம்!-மருளே நரகம்!- **இவர் சருக்கெழுத்தாளர்.**

2. நாம் கூறுகிறோம். அறிவாளி ஏற்கலாம். ஏனையோர் விட்டுவிடலாம்!-**இவர் முறுக்கெழுத்தாளர்.**

3. அடுக்கடுக்காக நிகழ்ச்சிகளைச் சொல்லிக்கொண்டே போவார்.- **இவர் அலை எழுத்தாளர்.**

4. அவன் தலையெழுத்து அப்படி! விதி அவனைச் சதிசெய்துவிட்டது- **இவர் தலை எழுத்தாளர்.**

5. இன்னின்ன ரேட்டுக்கு இப்படி இப்படி எழுதுவது - **இவர் விலை எழுத்தாளர்.**

இத்தனை வகையையும் காட்டித் தமிழ்நாட்டின் மறுமலர்ச்சி காணத் துடித்து எழுதும் ஆற்றல் பெற்ற "நிலை எழுத்தாளர்" தான் மிகக் குறைவு என்று அண்ணா அவர்கள் காட்டுவது சிரிப்பதற்கும் - சிந்திப்பதற்கும் உரிய எழுத்தல்லவா?

நாடகப் பேரறிஞன்.

சந்திரோதயமும் - சந்திரமோகனும் 'அண்ணா'வின் அரிய படைப்புகள். ஓர் இரவும்-வேலைக்காரியும் நாடக மேடைக்கே ஒரு நல்ல திருப்பம். தமிழ்நாட்டு பர்னாட்ஷா என்றும், இப்ஸன் என்றும் பேராசிரியர் கல்கியால் பாராட்டப்பட்டவர். "ஓர் இரவு" நாடக அமைப்பே நாடகத்துறையில் ஒரு புதுமை.

நடிப்புப் புலவன்.

சந்திரமோகனில் காகப்பட்டராகத் தோன்றி 'அண்ணா' அவர்கள் நடித்த நடிப்பு இன்னும் யாராலும் நடித்துக் காட்ட இயலாத உன்னத வகை!

காகப்பட்டர் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். சிவாஜி மன்னனும், சந்திரமோகனும் முன்னால் நிற்கிறார்கள். சந்திரமோகன் துடிக்கிறான்;- கையில் வாளுடன்; சிவாஜி கோபமாக "சந்திரமோகனா! வாளை கீழே போடு" என்று குரல் கொடுக்கிறார்; வாள் கீழே விழுகிறது;-அதே சமயம் சாய்வு நாற்காலியில் புன்முறுவல் பூத்தபடி சாய்ந்துகொண்டே கையிலுள்ள தர்ப்பைப் புல்லை லாவகமாக ஆட்டுகிறார் அண்ணா. அது நடிப்பா? அல்லவே அல்ல; புல்லின் முன்னால் வாள்வளைந்துவிடுகிறது என்ற வரலாற்று உண்மையின்படப்பிடிப்பு!

அரசியல் தளபதி

நீதிக் கட்சியிலே யிருந்தபோது அவர் **சி. என். அண்ணாதுரை** எம். ஏ.-திராவிடர் கழகத்திலே அவர் **தளபதி அண்ணாதுரை**-திராவிட முன்னேற்றக் கழகத்தினர்க்கு அவர் **அறிஞர் அண்ணா**-தமிழகத்திற்கு-**திராவிடத்திற்கு அவர் "அண்ணா."**

'அண்ணா' என்ற சொல் சிலருக்கு அச்சத்தைக் கொடுக்கலாம்; சிலருக்கு அழுக்காற்றை உண்டாக்கலாம்; சிலருக்கு ஐயமாகவும் இருந்திருக்கலாம்; ஆனால் பலருக்கு மகிழ்ச்சியைத் தரும் சொல்லாகிவிட்டது; இயக்கத்தைப் பிறைக் கோட்டினுள் தள்ளிவிட்டதாக எண்ணிய நிலைபோய், பிறைக்குறி மறைந்து, கேள்விக் குறியாக வந்து, கேள்விக்குறி ஆச்சரியக்குறியாக மாறி நிற்கும் நிலைக்கு இயக்கத்தை கொண்டு வந்தவர்-முதல்வர்-மூலவர் இந்த மூன்றெழுத்து மன்னர்தான்.

மாளிகை வாசிகளின் உறைவிடமாயிருந்த நீதிக் கட்சியை மக்கள் மன்றமாக்க திராவிடர் கழகமாக்கியவர் அறிஞர் அண்ணா. அப்போது "எது உமது இடம்?" என்ற கேள்வியைப் போட்டார் அந்தத் தளபதி. இரண்டு இடத்தையும்-அதன் தரத்தையும் பிரித்துக் காட்டினார். 'அண்ணா' அன்று காட்டிய அந்த இரண்டு இடங்கள்...இன்னும் உள்ளன. அண்ணாவின் அன்றைய எழுத்தைப் படியுங்கள்:

"கன்னிமாரா ஓட்டலிலே கனதனவான்களின் தாபத்தையும், பட்டங்கள் காட்டிடும் பாசத்தையும், பதவிகள் ஊட்டிடும் மோகத்தையும், சர்க்கார் அலுவலர்களின் சாகசத்தையும் அனுபவிக்கும் **இடம் அது!**

கட்டைவண்டி, கரடு முரடான பாதை, காட்டுப்பக்கம், அங்கோர் கலியாணம்-கட்டை வண்டி நெட்டைப் பனமரங்களினூடேசெல்கிறது. இது இங்கே! எங்கே அழைப்புச் சீட்டு? அங்கே கிளம்பும் கேள்வி! ஏனப்பா இவ்வளவு நேரம்? இங்கே பேச்சு! பங்கு எவ்வளவு? என்று அந்தச் சிங்கத்தின் கூட்டத்தில்விவாதிக்கப்படும் பாரம் எவ்வளவு தாங்க முடியும்? என்ற கணக்கெடுக்கப்படும் இடம் இது! அங்குச் செல்ல உங்களுக்குத் தங்கப் பிடியிட்ட தடியும் சரிகைப் பொட்டிட்ட தலைப்பாகையும் தேவை!

இங்கே வர உங்களுக்குத் தணலில் நடக்கும் தைரியமும் கறையில்லா வாழ்வின்மீது குறைவில்லாப் பற்றும் தேவை; அங்கே கிடைப்பது 'தேன்'...இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால் அந்தத் தேனில் விழுந்து மடிந்து கிடக்கும் 'தேள்' உங்களுக்கு நினைவிருக்கட்டும்:- அது விஷமூட்டப்பட்டதேன்!

இங்கே கிடைப்பது **"கரும்பு"** அதன் சாறுமட்டுமல்ல, சக்கையை உமிழ்நீரில் வைத்திருந்தாலும் இனிக்கும். ஆனால் கரும்புச்சாறு பெறக் கஷ்டப்பட வேண்டும்"

இந்த இரண்டு இடங்களையும் காட்டித் தனது படை வரிசையைத் திராவிடர் கழகத்திற்கு அழைத்து வந்தார் அந்தத் தளபதி. திராவிடர் கழகத்திலிருந்து முன்னேற்றக் கழகத்திற்கு வரும்போதும் அந்தத் தளபதி விளக்கம் கொடுத்தார்.

"மண்ணைத் தோண்டி பொன்னை எடுப்பது எளிதான செயலல்ல. வெட்டும்பொழுது பாறையின் சரிவிலும், சுரங்கத்தின் வெடிப்பிலும் நின்று தனது உயிரைப் பணயம் வைத்துத் தோண்டி எடுத்த தொழிலாளிக்கு நமது சிரம் சாய்க்கிறோம். இந்த மகத்தான பணியில் நமக்குத் தலைமை தாங்கிய தலைவரின் பங்கும் பணியும் மகத்தானது-ஒப்புக்கொள்கிறோம். ஆனால் வெட்டி எடுத்த மண்ணோடு கலந்த பொன்னைத் தங்கமாக மாற்றி, அணிமணிகள் செய்வதற்கு அதே வழி பயன்படாது. விஞ்ஞான ரீதியான ரசாயன முறைப்பட்ட வேறு வழி தேவை. பழையவழி பயன்படாது - பொன்னும் வீணாகி விடும்" என்று தெளிவுபடுத்தினார். பிறந்து இடத்துப் பாசம் காரணமாகப் பலர் தெளியவில்லை. இறுதியில் "புலி நுழைகிறது என்றேன்- புல்லன் எனத் தூற்றப்பட்டேன்" என்று குரல் கொடுத்துக் கண்ணீர்த் துளிகளுடன், கண்ணியமிக்க தம்பிகளுடன் வெளியே வந்தார். அந்த அறிஞர், முன்னேற்றக் கழகம் கண்டார். அண்ணாவின் இந்த வழியைக் கண்டு தப்புக் கணக்குப் போட்டார்கள் பலர். ஆனால் தமிழகமே வியக்கும்வண்ணம் பட்டி தொட்டிகளிலும், நாடு நகரங்களிலும் கிளைகளைப் பரப்பி, இரு லட்சத்திற்குமேற்பட்ட உறுப்பினர்களைக்கொண்ட ஆல மரமாக வேரூன்றச் செய்து, அதன் நிழலிலே ஆயிரமாயிரம் ஆதரவாளர்களையும் கூட்டிய பெருமை அறிஞர் அண்ணாவுக்குத்தான் உண்டு. அந்த அண்ணாவிற்குத்தான் எத்தனை ஆயிரமாயிரம் தம்பிகள்! கவிமுழக்கம் செய்யும் தம்பி! கலைமணம் பரப்பும் தம்பி! புரட்சி பேசும் தம்பி! லட்சியம் கூறும் தம்பி! நாவல்ல தம்பி! செயல் வீரத் தம்பி! **சிந்தனைச் சிற்பியான தம்பி! சொல்லின் செல்வத் தம்பி!** தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், கல்லூரிகளிலும் பள்ளிகளிலும், கலைமன்றங்களிலும் கணக்கிலடங்காத் தம்பிகள்! உணர்ச்சித் துடிப்பில், விடுதலை வேட்கையில் வீறு கொண்டெழும் அத்தனை தம்பிகளையும் அந்த மூன்றெழுத்து 'அண்ணா' கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு என்ற மூன்று சொல்லால் வேர் கொண்டு நாகத்தைப் பாம்பாட்டி அடக்குவதுபோல் அன்புள்ளத்தால் அடக்கி வைத்திருக்கும் அதிசயம் நாடே கண்டு வியக்கத்தக்கது!

வாழ்வின் ஐந்து பத்து ஆண்டைக் கடந்துவிட்ட 'அண்ணா' ஒரு முன்னோடி இயக்கத்தின் ஒப்பற்ற தலைவனாய், உயிரோட்டமுள்ள தளபதியாய், அறங்கூறும் அறிஞனாய் விளங்குகிறார்! ஐம்பதில் இயக்கத் தலைவனாக விளங்கும் அண்ணா அறுபதில் இந்த நாட்டின் தலைவராகத் திகழ்வார்! அதற்கான விடிவெள்ளி தோன்றிவிட்டது! எழுஞாயிற்றின் ஒளிக்கதிர்கள் பளிச்சிட ஆரம்பித்துவிட்டன! வாழ்க அண்ணா!

-புத்தனேரி. மதிவாணன்.

வருந்துகிறோம்.

கவிஞர் **முடியரசன்** அவர்களின் இளையமகன் **சுப்பிரமணியம்** சில நாள் நோய்வாய்ப்பட்டு மாண்டதை அறிவிக்க வருந்துகிறோம். வருத்தப்படும் குடும்பத்தார்க்கு, எமது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆ-ர்.

தி. மு. கழக

10-வது ஆண்டு நிறைவு விழாவும் திராவிட நாடு விடுதலை வாரமும்.

17-9-'59-ம் நாளிலிருந்து 23-9-'59-ம் நாள்வரை கொண்டாட வேண்டுகோள்.

பொதுச்செயலாளர் அறிக்கை.

17-9-'59-ம் நாளில் திராவிட முன்னேற்றக் கழகம் பத்தாண்டு நிறைவு பெற்றுப் பதினோராவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

இந்த நிகழ்ச்சி கழக வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொரு சீரிய வரலாற்று நிகழ்ச்சியாகும் என்பதோடு மட்டுமல்லாமல், பூரிப்போடும் பெருமையோடும் கொண்டாடத்தக்கதொரு பெருவிழா நிகழ்ச்சியுமாகும்.

கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு என்னும் பண்புகளைத் துணையாகக் கொண்டு, பொலிவோடும் வலிவோடும், பெயரோடும் புகழோடும், அருமையாகவும் பெருமையாகவும் வளர்ந்து வரும் திராவிட முன்னேற்றக் கழகம், பத்து ஆண்டு நிறைவு பெறுகிறது என்னும் செய்தி கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும், கழக வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள பொதுமக்களையும் உளங் குளிர வைக்கும் நற்செய்தியாகும்.

தி. மு. கழகப் பத்தாவது ஆண்டு நிறைவுவிழாவை, இதற்கு முன் நடைபெற்ற நிறைவு விழாக்களைவிட எழிலும் ஏற்றமும் பொங்கும் வகையில், ஏற்ற முறைகளிலெல்லாம் கொண்டாடுமாறு கிளைக் கழகங்களையும், கழகத் தோழர்களையும், ஆதரவாளர்களையும் கேட்டுக்கொள்கிறேம்.

பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டிய ஏழு நாட்களை, அதாவது 17-9-59-ம் நாளிலிருந்து 23-9-59-ம் நாள் முடிய உள்ள ஒரு வார காலத்தை, வழக்கம்போல் திராவிட நாடு விடுதலை வாரமாகக் கொண்டாடுமாறும் கேட்டுக்கொள்கிறேம்.

கழகத்தின் வரலாற்றை எடுத்துரைத்தல், கொள்கைகளையும் நோக்கங்களையும் தெளிவாக்கிக் காட்டுதல், அரிய செயற்பாடுகளைச் சுட்டிக் காட்டுதல், செயல்முறைத் திட்டங்களை விளக்கிக் காட்டுதல், கழக வளர்ச்சிக்கான வழிவகைகளைக் கோலுதல் போன்ற சீரிய முயற்சிகளில் ஈடுபடுமாறு அனைவரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேம்.

பொது அமைதிக்கு ஊறு நேரிடாத வகையில் கொடியேற்று விழாக்கள் நடத்துதல், பொதுக்கூட்டங்கள் கூட்டுதல், ஊர்வலங்கள் நடத்துதல், கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தல், கொள்கை விளக்க ஏடுகள் வெளியிடுதல், துண்டு அறிக்கைகள் பரப்புதல் போன்ற பல்வேறு வகையானும் விழாவைச் சிறப்புறக் கொண்டாடுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

'அறிவகம்' சென்னை-13.
1-9-1959

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

பன்மொழிப் புலவர் இலங்கை செல்கிறார்.

பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்துரையார் எம். ஏ., எல். டி. அவர்கள் **கொழும்புத் தமிழ்ச்சங்க முத்தமிழ் விழாவில்** செப்டம்பர் 19, 20-ம் நாட்களில் கலந்து கொண்டு கீழ்க்கண்டவாறு பேசுகிறார்கள்:

19-9-'59—**"வருங்கால உலகில் தமிழ்"**

20-9-'59—**"மணிமேகலை துறவு"**

—6-ம் பக்கத் தொடர்ச்சி—

ஒருகால் மகாராட்டிரியில் அதை அடக்கினர் போலும்! பிற்காலத்தாசிரியர் சிலர் திராவிடி என்பது ஒரு சிறுதரப் பிராகிருதம் என்றனர். ஆயின், 19-ஆம் நூற்றாண்டிலிருந்த பாபு ராசேந்திரலால் மித்திரா என்னும் வங்காளர், அதைச் சூரசேனியோடொத்த பெரும் பிராகிருதம் எனக் கூறினர்.

தமிழினின்று முதலாவது பிரிந்த திரவிட மொழி தெலுங்காகும். அது வடதிசையில் தோன்றியமைபற்றி வடுகு எனப்பட்டது. குமரிலபட்டர் காலத்தில் தெலுங்கு தனித்துக் கூறப்படுமளவு வளர்ச்சியடைந்து விட்டதனால், அவர் அதுவரை திராவிடம் என்னும் பொதுப் பெயராலேயே வழங்கிய செந்தமிழையும் கொடுந் தமிழ்களையும், 'தெலுங்கு-தமிழ் மொழி' என்னும் பொருள்பட 'ஆந்திர-திராவிட பாஷை' என்றனர்.

தெலுங்கிற்குப்பின் தமிழினின்று பிரிந்த பெருமொழி கன்னடம். அதனால்,

"வடகலை தென்கலை வடுகு கன்னடம்" எனக் கம்பராமாயணச் சிறப்புப்பாயிரச் செய்யுளொன்றில் கன்னடமும் சேர்க்கப்பெற்றது.

12-ம் நூற்றாண்டிற்குப்பின், மலையாளம், துளு குடகம் முதலிய பிற கொடுந்தமிழ்களும் பிரிந்து போயின.

சென்ற நூற்றாண்டில் கால்டுவெல் திரவிட மொழிகள் பதின்மூன்றெனக் கணக்கிட்டார். இன்றோ அவை பத்தொன்பதெனப் பரோ, எமனோ என்னும் இரு மேலை மொழி நூல் வல்லாரால் கணக்கிடப்பட்டுள்ளன.

ஒரு காலத்தில் இந்தியா முழுதும் திரவிடம் பரவியிருந்ததென்பதற்கு, இன்றும் பெலுச்சித்தானத்தில் பிராகுவீயும், வங்காளத்தில் இராசமகாலும் வழங்கி வருவதே போதிய சான்றும்.

ஆரியர் வந்து வட இந்தியா முழுதும் பரவியபின், விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள மொழிகளெல்லாம் திரவிடம் என்னுங் கொள்கையிருந்தது. அதனாலேயே, தெலுங்கு, கருநாடகம், மராத்தி, கூர்ச்சரம், (குசராத்தி) திராவிடம் என்னும் ஐந்தும் பஞ்ச திராவிடம் என்று வட நூல்களும் கூறின. இப்பட்டியில், திராவிடம் என்னும் பெயர் தமிழை மட்டுங் குறித்தல் கவனிக்கத்தக்கது. திராவிட(ம்) என்பது சில வட நூல்களில் திராவிர(ம்) என்றும் திரிந்தது. டகரம் ரகரமானது போலி.

இது கூறுங் கூறியவற்றால், தொன்றுதொட்டுத் தமிழையேதனிப்படவும் தலைமையாகவும் குறித்து வந்த திரவிடம் என்னும் சொல், தமிழம் என்பதன் திரிபே என்பது, வரலாற்றுணர்ச்சி யுடையார்க்கெல்லாம் தெற்றென விளங்குதல் திண்ணம். ஆயினும், 'ஆனைக்கும் அடிசறுக்கும்' என்னும் பழமொழிக்கேற்ப, கால்டுவெல் திரவிடம் என்னும் சொல்லே, முறையே, (த்ரவிடம்-த்ரமிடம்-த்ரமிள தமிழ் எனத்) திரிந்ததென்று தலைகீழாகக் கொண்டார். ஆயின், கிரையர்சன் அதைத் திருத்தி உண்மையைக் கூறியது மகிழ்ச்சிக்குரியது.

எனினும், இன்றும சிலர் மயங்குவதற்குக் காரணம் வரலாற்றறிவின்மையே. ஆரியர் இந்தியாவிற் கால் வைத்தது கி. மு. 3000 ஆண்டெல்லையென்றும், தமிழ் முழுவளர்ச்சியடைந்து முத்தமிழாய் வழங்கிய தலைக் கழகக் காலம் கி. மு. 10,000 ஆண்டெல்லையென்றும், அறியின், ஒருவரும் ஐயுறார் என்பது தேற்றம்.

வடமொழியில் நூற்றுக்கணக்கான தென் சொற்களிருந்தும் அவற்றையெல்லாம் வடசொல்லெனக் காட்டுவதையே வடமொழி யகராதிகளெல்லாம் கோட்பாடாகக் கொண்டிருக்கின்றன.

வடமொழி தேவமொழியெனும் மயக்கு புலவருள்ளத்திலுமிருந்ததினால், கம்பர் அதைத் "தேவபாடை" என்றார். தொல்காப்பியச் சொல்லதிகார வுரையில் (401). "தமிழ்ச்சொல் வடபாடைக் கட்செல்லாமையானும், வடசொல் எல்லாத் தேயத்திற்கும் பொதுவாதலானும்" எனவுரைத்தார் சேனாவரையர். இத்தகைய நிலைகள், வடவர் திரவிடம் என்னும் சொற்குப் பொருந்தப் பொய்த்தலாகச் சில பொருட் காரணம் காட்டத் தூண்டின.

'த்ரு' என்னும் வடமொழி வேர் துரத்துதற் பொருள் தருவதென்றும், ஆரியரால் தெற்கே துரத்தப்பட்டவர் திரவிடர் எனப்பட்டனர் என்றும் கூறுவர் ஒரு சாரார். திரவிடம் என்பது தெற்கு என்று பொருள் படுவதென்றும், தென் கோடி மாகாணத்தார் திரவிடர் எனப்பட்டனர். என்றும், கூறுவர் மற்றொரு சாரார். திரவிடம் தெற்கேயிருப்பதினாலேயே, திரவிடம் என்னும் சொற்குத் தெற்கென்னும் வழிப் பொருள் தோன்றிற்று.

சிவஞான முனிவர், உள்ளதைக் கொண்டு நல்லதைப் பண்ணும் முறையில், துரத்துதல் அல்லது ஓட்டுதல் என்னும் வேர்ப்பொருளை ஒப்புக்கொண்டு, தீவினை யகற்றும் அறநூல்கள் தமிழிற் சிறந்திருப்பது பற்றி, தம் காஞ்சிப் புராணத்தில்,

"எவ்வினையும் ஓப்புதலால்
திராவிடம்என் றியல்பாடை"

என்று பாடினர்.

'த்ரு' என்னும் வடமொழி வேர் 'துர' என்னும் தமிழ் வேரின் திரிபே. இத்தமிழ் வேர் மேலையாரியத்தில் தியூத்தானியம் என்னும் கிளையிலும் சென்று வழங்குகின்றது.

செருமன்: Treiben, பண்டை ஆங்கிலம்: Drifeu, ஆங்கிலம்: Drive,

துரத்தல் என்பது ஓட்டுதல்.

ஆகவே, வடமொழியார் கூறும் இரு பொருளும்; திரவிடம் என்னும் சொல்லை வடசொல்லாகக் காட்ட இயலாமை காண்க.

இனி, ஒரு சில தமிழர், திரு + இடம் = திருவிடம்—திரவிடம் — திராவிடம் என வந்ததாகக் காட்டுவர். இவ்வரலாறு உத்திக்குப் பொருந்தாமையோடு சான்றும் அற்றது.

ஒரு சார் இளபுலவர், திரு + இடம் = திராவிடம் எனப் புணர்த்து,

"அன்றுவரு காலை
ஆவா குதலும்
....
செய்யுள் மருங்கின்
உரித்தென மொழிப" (258)

என்னும் தொல்காப்பிய விதியையும்,

"அதுமுன் வருமன்
றான்றாந் தூக்கின்" (180)

என்னும் நன்னூல் விதியையும் துணையாகக் காட்டுவர்.

அது + அன்று என்பது, அதன்று என்று புணர்ந்து செய்யுளில் அதா அன்று என்று அளபெடுத்த நிலையையே மேற்காட்டிய விதிகள் குறிப்பதால், அவர் கூற்று சற்றும் பொருந்தாததெனவிடுக்க. மேலும், அவர் கருத்துப்படி, திரு + இடம் என்பது திரீயிடம் அல்லது திரீடம் என்றே புணர வேண்டும் என்க.

இதுகாறும் கூறியவற்றால், திரவிடம் என்பது தென் சொல்லே யென்று தெளிக.

தமிழ் என்பது தூய்மையான தமிழையும், 'திரவிடம்' என்பது தமிழினின்று திரிந்த தெலுங்கு, கன்னட முதலிய இனமொழிகளையும் இன்று குறிக்குமென்க.

வடமொழியில் உயிர்மெய்ம்முதலை மெய்ம்முதலாக்கி ரகரத்தை வழிச் செருகற்கு, படி-ப்ரதி, பவழம்-ப்ரவாளம் என்பன எடுத்துக் காட்டுக்கள். ★

தாயகத்தின் தொண்டர்!

—முன் இதழ்த் தொடர்ச்சி—

சொல்லேர் உழவர் அண்ணாவின் தோற்றத்திலே ஒரு பெருமிதம் காண்கிறோம். அது அவரது குட்டையான உருவத்தால், மாந்தளிர் மேனியால், பல்லெடுப்பான முகத்தால், அழகிய அச்சிறு மீசையால், வெற்றிலைக் காவி வெளித் தோன்றக் கண்ணைச் சிமிட்டிச் சிரிக்கும் குறும்புப் புன்னகையால் மட்டும் அல்ல அப்பெருமிதம். பெருமிதம் என்னும் மெய்ப்பாடு பிறக்கும் இடங்களாகக் கூறிய நான்கனுள்

"கல்வி தறுகண்
இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட
பெருமிதம் நான்கே"

என ஆசிரியர் தொல்காப்பியர் கூறியதுபோல் கல்வி காரணமாகப் பிறக்கும் பெருமிதத்துக்கு உரியவர் ஒருவர் நமது திராவிடத்தில் உண்டென்றால் அவர் நமது அண்ணா எனின் மிகையாகாது.

கல்வி கேள்வியால் உயர்ந்த அண்ணாவின் சொல்வண்மைக்குச் சான்றாகவும்-இலக்கியத்தில் இடம் பெற்றுவிட்டனவுமான நிகழ்ச்சிகள் இரண்டு. ஒன்று 9-2-43-ல் சென்னை சட்டக் கல்லூரி மண்டபத் திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் தலைமையில் சொல்லின் செல்வர் ரா. பி. சேது(ப்பிள்ளை) அவர்கட்கும் நமது அண்ணா அவர்கட்கும் நிகழ்ந்த சொற்போர். இரண்டாவது 14-3 43 ல் சேலம்கல்லூரித் தலைமை ஆசிரியர் இராமசாமி அவர்கள் தலைமையில் பெருநாவலர் எஸ். எஸ். பாரதியாரும் அறிஞர் அண்ணாவும் நிகழ்த்திய சொற்போர். இது வரலாற்றிலும் இடம் பெற்றுவிட்டது. இத்தகு சொற்செல்வரை, தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

"தமிழ்நாடு திராவிட நாடாகச் செவ்வனே ஆக்கமுற்று வடநாடு, திராவிட நாடு எனப் பிரிந்து தன்னாட்சி நிறுவ திரு. அண்ணாதுரை அவர்கள் பலதுறையிலே உழைத்துவருகிறார் ....அண்ணாதுரையென்னும் அண்ணல் வாயிலாகத் திராவிட நாட்டை நாம் பெறும் காலம் அணித்தே இருக்கிறது."

என்றார். அத்துடன் நிற்கவில்லை. இறுதியில் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் திரு. வி. க. அவர்கள்.

"...முதலில் பெரியார் சாவியை அண்ணாவிடம் ஒப்படைக்கவேண்டும்."

என்றார்.

இதற்குப் பெரியார், "...வயது வந்த மகனிடம் பெட்டிச்சாவியைக் கொடுக்க வேண்டியது தானே நியாயம். எனக்கு வயது 70 தாண்டிவிட்டது. இனியும் எத்தனை நாளைக்கு நானே பெட்டிச்சாவியை வைத்துக் கொண்டு அலைந்து திரிந்து பணியாற்றிக்கொண்டிருக்க முடியும்? ஆகவே, பெட்டிச்சாவியை அண்ணாவிடம் கொடுக்கத் தீர்மானித்துவிட்டேன்" என்றார்.

அன்பே உருவான அண்ணா சுமார் பதினைந்து ஆண்டுகாலம் பெரியார் அவர்களிடம் மகனைப்போன்ற பாசத்துடன் பழகி வந்தார். அன்னை டாக்டர் தருமாம்பாள் அவர்களும் நானும் பெரியாரிடம் நலம் விசாரித்துக் கொண்டிருந்த இரண்டு முறைகளிலும் 'அண்ணா' என்று கூறியவுடன்-அண்ணா அவர்களைப் பற்றிக் கேட்டவுடன் அச்செஞ்ஞாயிறின் பரந்த முகத்தில் தாடிக்கும் மீசைக்கும் இடையில் மறைந்து இருந்த அந்த உதடுகள் சிரித்த சிரிப்பு-அவருக்கே உரிய புன்னகையில் காணும்போது-பெரியாரின் நெஞ்சத்தின் ஆழத்தில் அண்ணாவின் அன்பு படர்ந்திருந்ததைக் காணமுடிந்தது. தோள்கள்கூடச் சிறிது குலுங்கின. அக்காட்சி என் நெஞ்சத்தை விட்டு இன்னும் அகலவில்லை. மேலும் அண்ணாவின் சொல்வண்மைபற்றி-ஆற்றலைப்பற்றி சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் உள்ளம் மலரக் கூறுகிறார்:

"...யான் பல நாட்களாகக் கேளாத திண்ணிய உரையைக் கேட்கும் வாய்ப்பை இன்று பெற்றேன்...ஒரு குடும்பத்திலே தகப்பன் பிள்ளையை விட்டுப் பிரிவதில்லையா? தகப்பனுக்கும் பிள்ளைக்கும் தகராறு இருந்தாலும் எதிரிக்கு இடங் கொடுக்கமாட்டோம். எதிரியை ஒழித்துக் கட்டுவதிலே தோளுக்குத் தோள் கொடுப்போம். திரு. அண்ணாத்துரை அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றினால் தமிழ் மேம்பாடு அடையும் என்பதில் ஐயமில்லை..."

"திராவிட நாடு ஐக்கிய நாடாகி அந்தத் திராவிட நாட்டிலே திராவிட தளபதி அண்ணாத்துரை அவர்கள் தமிழ்க்கொடி ஏந்தி, அந்தக் கொடியின் பின் தமிழ் வீரர்கள் இராணுவ நடை போட்டுச் செல்லும் நாளைக் காண்பேனேயானால் அதுவே யான் பெற்ற பேறு என்று எண்ணி மகிழ்வேன். அண்ணாத்துரை கலையறிந்தவர். தமிழ் நாட்டின் பழைய நிலையறிந்தவர். தமிழ் வாழ வேண்டும், தமிழர் பண்பாடு சிறக்க வேண்டும் என்ற அரும்பெரும் குறிக்கோளுடைய 'அண்ணா' நீடு வாழ்க."-இவ்வாறு வாழ்த்தினார்.

இத்தகு சிறப்பு வாய்ந்த அண்ணாவுக்கு 50 ஆண்டுகள் நிறைவுறுகிறது; 51-வது ஆண்டு பிறக்கிறது என்றால் தமிழ் நெஞ்சங்களில் ஒரு புதிய மணம் படைத்த மலர் மலர்கிறது. அம்மலர்களைக் காணிக்கையாக அண்ணாவின் அருமைத் தொத்தா திருமதி இராஜாமணி அம்மையார் கைகளில்தான் குவிக்க வேண்டும். தாயைப் பிரிந்த அண்ணாவுக்கு ஈன்ற தாயினும் சாலப் பரிந்தூட்டும் தாயாய் - தந்தையாய் இருந்து - அண்ணாவை ஊக்குவித்து நாட்டின் பொதுவாழ்வுக்குத் தந்து உதவிய அத்தாய் - "தொத்தா" எனும் அந்தச் செல்லப்பெயர்-இன்று "எங்கள் அண்ணா" என்று அழைப்பதுபோல் "எங்கள் தொத்தா" வாகவே ஆகிவிட்டார்கள். வாழ்க இராசாமணி அம்மையார் பல்லாண்டுகள்.

பெத்துநாயக்கன் பேட்டையில் 1936, 37, 38 ஆம் ஆண்டுகளில் "லீக் ஆப் யூத்" எனும் இளைஞர் மன்றத்தில் பாராளும் மன்றப் பழக்கங்களில் தேர்ச்சி அடைவதற்காக போலிப் பாராளும் மன்றம் Mock Parliment, நடக்கும். அதில் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராய் இருந்து அவர் ஆற்றிய பேச்சுகள் இன்னும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. அன்று 50 பேர்தான் அந்த அவையில் இருப்பர். இன்று 5 லட்சம் பேர் கூடும் பேரவைகளில் அண்ணா இருப்பதைக் காண்கிறோம். கூட்டம் சிறியதாயிற்றே என்ற கவலை அண்ணாவுக்கு என்றும் கிடையாது ஒரு முறை இலக்கிய மன்றத்தில் திரு. எ. எல். பாண்டியா என்ற வழக்கறிஞர் இந்தியை ஆதரித்துப் பேசினார். அண்ணா எதிர்த்துப் பேசி அனைவரையும் ஆரவாரிக்கும்படி செய்துவிட்டார். அதன் பிறகு யாருடைய பேச்சும் எடுபடவில்லை. 1934 35 ஆம் ஆண்டில் 'ஜார்ஜ் டவுன் அத்தலிட்டிக் அசோசியேஷன்' என்ற நிறுவண சார்பில் திரு. எ. இலட்சுமணசாமி முதலியார் முன்னிலையில் ஒருதடவையும் திரு. சர். எ. இராமசாமி முதலியார் தலைமையிலும் ஆட்டங்களைப் பற்றியும் விளையாட்டுகளைப் பற்றியும் மிகச் சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றி இருக்கிறார். அப்பொழுது அருமை அண்ணாவின் பேச்சினை சுவைத்த சர். ஏ. இராமசாமியார், 'திரு. அண்ணாதுரை என்னுடைய நடையையும் எனது கருத்துக்களையும் மிக நெருங்கிப் பின்பற்றி இருப்பதாகத் தெரிய வருகிறது நான் அதிகமாகப் பேசாமுடியாதுபோல் இருக்கிறது" எனக் கூறியது நினைக்க வருகிறது. உலகம் புகழ்ந்த ஆங்கில மொழிப் பெருநாவலர் திரு ஏ. இராமசாமி அவர்களே புகழ்வார்களானால் நாம் என் சொல்வது?

1937-ம் ஆண்டு ஒய். எம். சி.ஏ. அத்தீனிய மண்டபத்தில் திரு. ராஜாஜி நடுவராக அமைய திரு ஏ. எல். பாண்டியா அவர்கள் "பண்டித் பரீட்சத்" என்ற பொருளை முன்மொழிந்து பேசினார். அங்கிருந்த சிலர் அண்ணா அவர்களைப் பேசச் செய்யுமாறு வேண்டினர். பலர் வேண்டுதலுக்கு இணங்கி அண்ணாஅவர்கள் 'பிரேரேபனை"யை வெட்டிப் பேச ஐந்து நிமிடம் தரப்பட்டது. ஐந்து பத்தாகி, பத்து பதினைந்தாகி நாற்பத்தைந்து நிமிடம் "பண்டித் பரீட்சத்" பிரேரேபனையை எதிர்த்து சான்றுகள் காட்டி அவையோர் மகிழும் வண்ணம், நடுவர் (இராசாசி) நெற்றிப் புருவம் நெறியும் வண்ணம் பேசினார். அண்ணா பேசிப் போன பிறகு இராசாசி காரில் ஏறுவதை வேடிக்கை பார்த்த எனது காதுகளில் இராசாசி, திரு. எஸ். எஸ். இராஜகோபாலன் ஒய். எம். சி. ஏ. அத்தீனிய சபா நாயர் திரு. எ. எல். பாண்டியா முதலியவர் பார்த்து "பார்த்தாயா! அந்த இளைஞனை! நீங்களும்தான் இத்தனை ஆண்டுகளாகப் பேசுகிறீர்கள்-அவன் பேச்சில் தீப்பொறிகள் அல்லவா சிதறுகின்றன" என்றார். இந்த சொற்களை அடிக்கடி எண்ணுவதுண்டு.

அண்ணாவின் செஞ்சொற்களைப் பற்றி நினைக்குங்கால் அண்ணா முதல் முதலில் மெமோரியல் பண்டபத்தில் நல்லார் டாக்டர் சி. நடேசனார் அவர்கள் தலைமையில்தான் தமிழில் பேசி மக்களை மகிழ்வில் திளைக்கச் செய்தார் என்பது நினைவிற்கு வருகிறது.

குறிப்பாக அண்ணா 19-2-42-ல் தாம்பரம் கிறித்துவக் கல்லூரி தமிழ்ச் சங்க ஆண்டு விழாவில் திரு. அ. கி. பரந்தாமனார் தலைமையில் "பொருள்" என்பதுபற்றி பேசிய பேச்சும் 1949ல் திரு. வி. க. தலைமையில் பொதிகை நூல் நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவின்போது 'நூல் நிலையங்கள்" என்ற தலைப்பில் பேசிய பேச்சும், 24-3-49-ல் கொத்தவால்சாவடி வள்ளுவர்கழகச் சார்பில் எ. எஸ். துரைசாமி அவர்கள் தலைமையில் "இந்து அறநிலையப் பாதுகாப்பு மசோதா"வை அதரித்துப் பேசிய பேச்சும், 8-8-51-ல் சர் தியாகராயர் கல்லூரியில் எஸ். ஏ. பி. பாண்டியன் அவர்கள் தலைமையில் 'சொல்லும் பயனும்" என்னும், பொருள்பற்றிப் பேசிய பேச்சும், மிகச் சீரியன; திட்பம் வாய்ந்தன எனக் கூறின் மிகையாகா. இதில் தியாகராயர் கல்லூரியில் "சொல்லும் பயனும்" எனும் பேச்சில், "தியாகராயர் பெயரால் கல்லூரிகள் மட்டுமல்ல; தியாகராயர் பெயரால் துறைமுகங்கள், பெரிய கப்பல்கள், சங்கங்கள், மண்டபங்கள் இன்னும் பலப்பல தோன்றப் போகின்றன" என்று கூறினார். அச்சொல், சொல் அளவில் சொல்லாக நிற்கவில்லை. அது பயனாகவும் மிளிர்ந்து வருவதைக் காண்கிறோம். ஏதோ சொல்லிவிட்டுப் போய்விடாமல், அச்சொல்லைக் காப்பாற்றி சர். தியாகராயர் கல்லூரிக்கு எண்ணியபோதெல்லாம் ஏற்றமளித்துத் தன்படை வரிசையைக்கொண்டு பண பலத்தை அளித்துக்கொண்டும் அக்கல்லூரியை நம்பி வருகிறார். கல்லூரி நிருவாகத்தில் இல்லாது போனாலும் மானசீகமாக நிருவகித்து வருகிறார்.

கடைசியாக 1951-ம் ஆண்டு சென்னைக் கடற்கரையில் மே தின விழாவிலே அண்ணா ஆற்றி சொற்பொழிவு இலக்கியத்திலே இடம் பெற்றுவிட்டது. அதில் அண்ணா கூறினார்: "**இந்த நாட்டை அடக்கி ஆளும் சக்திகள் இன்று வாளும் வில்லுமல்ல; துப்பாக்கிக் குண்டும் அணுக் குண்டுங்கூட அல்ல. ஆனால் துப்பாக்கிக் குண்டுகளையும், அணுக் குண்டுகளையும் விட வலிமை வாய்ந்த இரு சக்திகளை வடநாட்டு முதலாளி வைத்துக் கொண்டு இயக்குகிறான். அந்தச் சக்திகள் தராசும் டெலிபோனுமே,**" இதனை நீளச் சிந்தித்தால் 200 பக்கம் உள்ள பொருளாதாரக் கட்டுரையும் வரையலாம். நிற்க,

— அடுத்த பக்கம் —

உறுப்பினர் சேர்க்கும் நாள் நீடிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகப் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவினையொட்டி, கழக உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியை விரிவாக நிறைவேற்ற வசதியாயிருக்குமென்ற காரணத்தால், உறுப்பினர்கள் சேர்க்கும் நாளை மேலும் நீடிக்க வேண்டுமென்று மாவட்டச் செயலாளர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, உறுப்பினர் சேர்க்கும் நாளை செப்டம்பர் இறுதி வரை நீடிப்பதென்று இச்செயற்குழு முடிவு செய்கிறது."

—இவ்வாறு 11-9-59 அன்று அறிவகத்தில் கூடிய தி. மு. க. தலைமைச் செயற்குழு தீர்மானித்திருக்கிறது. தோழர்கள் அனைவரும் விரைவில் உறுப்பினராகப் பதிவு செய்துகொள்க.

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

இப்பொழுதும் ஒருவர்திரு மணத்துக் காக
    என்குடும்பத் துடன்சென்றேன்; வரவு கூற
எப்பொழுதும் முன்னிற்போர் எவரும் இல்லை;
    என்துணை வெறுங்கழுத்தும் கையும் கண்டார்;
சிப்பிவினை பொத்தான்கள் இல்லாச் சட்டை
    சிலைநிகர்க்கும் என்மக்கள் அனைத்தும் கண்டார்;
செப்புகின்றார் பஞ்சையென; ஒதுங்கி நின்றார்;
    சிரித்திருந்தேன் உறவினர்கள் செய்கை கண்டு.

படுப்பதற்கோர் படுக்கையில்லை பாயும் இல்லை;
    பக்கத்து வீட்டிலொரு திண்ணையோரம்
தடுப்பதற்கோ ஆளில்லை; சாய்ந்து கொண்டேன்;
    தவமிருந்து பெற்றமக வொன்றை அங்கே
அடிப்பதைநான் கண்டெழுந்து தடுத்து நின்றேன்;
    "அப்பப்பா, இப்பொழுதே திருடக் கற்றுக்
கொடுப்பதற்கோ அழைத்துவந்தாய்?" என்று சொல்லிக்
    குழந்தையின்கைக் கனியொன்றைப் பறித்துச் சென்றார்

பொருளுடைய மொழிதந்து வந்து சூழ்ந்து
    போற்றுகின்ற உறவுமுறை வளர்ந்து காணும்;
பொருளிலையேல் ஒருபொருட்டாய் மதியா தன்றிப்
    புன்மொழிகள் புகலுதற்கும் அஞ்சா தந்தோ!
பொருளுளதேல் சாப்பாட்டுக் கூட்டம்; கெட்டுப்
    போய்விடினோ கூப்பாட்டுக் கூட்டம் என்ற
பொருளுரையைக் காட்டுகின்ற உறவை நம்பிப்
    புவிதன்னில் வாழ்வதுதான் நன்றோ சொல்வீர்!

இப்புவியில் என உறவின் முறைதான் சொன்னேன்.
    ஈண்டுள்ளார் நல்லவர்கள் குறளிற் கூறும்
ஒப்புரவு தெரிந்தவர்கள், திருக்கு றட்கே
    உயர்வுநல்குத் தேனப்பன் என்னும் நண்பன்
செப்பரிய முயற்சியினால் இங்குக் கண்ட
    திருக்குறளின் கழகத்தில் உறவு கொண்டோர்;
நற்குடும்ப நெறியறிந்து வாழும் சான்றோர்;
    நலமனைத்தும் பெற்றிங்கு வாழ்க! வாழ்க!

மழையூரசன்

[அடுத்த இதழில், அன்பு அருணாசலம் அவர்களின் கவிதை வரும்.]

—முன் பக்கத் தொடர்ச்சி—

1930-ல் திரு. இராணி அம்மையாரை மணந்து சிறப்பாக வாழ்ந்து வருகிறார். நாட்டுக்கும், மொழிக்கும், மக்களுக்கும் ஓயாது தொண்டாற்றும் அண்ணா அவர்கள் குடும்ப நிருவாகத்தைக் கவனிக்கஓய்வேது? திருமதி இராணி அம்மையார்தான் குடும்பத்தைத் திறமையுடன் நிருவாகம் செய்து வருகிறார்கள். இன்றும் அண்ணாவுக்கு உகந்த இன்சுவை அமுதை இராணி அம்மையார் அவர்களே தயாரிக்கும் பண்பு பெற்றுத் திகழ்கிறார்கள். இராணி அம்மையார் அண்ணா அவர்களுக்கு உணவு சமைப்பதிலும், ஓய்ந்தபோது அருமையான நூல்களைப் படிப்பதிலும் பழக்கமுடையவர்கள். இப்பொழுதெல்லாம் மகளிர் மன்றச் சார்பிலும் டாக்டர் தருமாம்பாள் இலக்கிய வகுப்பு நிகழ்ச்சிகளிலும் கலந்து பொதுபபணியும்-பேச்சுச் சிறப்பும் பெற்று வருகிறார்கள். இம்மணத்திலே எழுந்த அன்பால் பெண்ணின் பெருமை உயரப் பாடுபட்டு வருகிறார் அண்ணா.

1942-ல் "திராவிட நாடு" இதழ் தோற்றுவித்தும், 1949-ல் "மாலை மணி" இதழ் ஆசிரியர் ஆகியும், 1953-ல் "நம் நாடு" இதழ் ஆசிரியராகவும் இருந்து எழுத்துக் கலையை வளர்த்து அருளினார்கள். திராவிட நாடு இதழில் அவரெழுதிய மேல்நாட்டு நடப்புக்கள், விஞ்ஞானக்கருத்துக்கள், பொருளாதாரப் புள்ளிவிவரங்கள் முதலியன புது அமைப்பைத் தந்தன.

1939-ல் "விடுதலை தினசரியின் துணையாசிரியராய் இருந்தபோது பல தலையங்கங்களும் கட்டுரைகளும் தீட்டி இருக்கிறார். அண்ணா அவர்கள் எழுதி வந்த 'உரார் உரையாடல்' எல்லோரையும் கவர்ந்தது. அவர் அதில் எழுதிய தலையங்கங்களில் 'கல்கத்தா காய்ச்சல்' மிகச் சிறந்ததாய் அமைந்தது. அதனைப் படித்த அனைவரும் வீர உள்ளம் எய்தினர் எனின் பொருந்தும்.

அண்ணாவின் உள்ளம் அன்பும் கனிவும் பாசமும் பற்றும்கொண்டது-அதே சமயத்தில் அது எதைக் கண்டும் அஞ்சாத எஃகு உள்ளம் படைத்ததாய் அமைந்தது. சுமார் 1939-ல் "விடுதலை"யில் ஒரு நாள் தலையங்கம் தீட்டினார். தலையங்கத்தைப் பெரியார் அவர்கள் பார்ப்பது வழக்கம். அதில் திரு. குமாரராஜா (இன்றைய ராஜா சர்.) அவர்களைத் தாக்கி இரண்டு வரிகள் இருந்தன. அந்த இரண்டு வரிகளை நீக்கி அச்சிட்டுவிடுமாறு செய்தி அனுப்பினார் பெரியார். வீரநெஞ்சினராகிய அண்ணாவின் உள்ளம் - பேனாவை வளைக்கவோ-கொள்கையை விட்டுக் கொடுக்கவோ - தயங்கவில்லை. தந்தைப் பாசம்போன்று பெரியார் இடம் வைத்த அந்தப் பாசத்தையும் சிறிது அகற்றி அந்த இரண்டு வரிகளோடுதான தலையங்கம் வெளி வர வேண்டும்-இல்லையேல் நான் வெளியேறுகிறேன் என்று செய்தி அனுப்பி விட்டார். அப்பொழுது அண்ணா அவர்கள் சிந்தாதிரிப்பேட்டை சாமி பண்டாரம் தெருவில் குடியிருந்தார்கள். உடனே பெரியார் அண்ணாவின் இல்லம் வந்து கேட்டுக்கொண்டும் மறுத்துவிட்டார். உண்மையான பேனா வீரர் என்பதற்கு இந்த ஒரு உண்மையே சாலப் பொருத்தமுடைத்து.

இந்தியா சுதந்திரம் அடைய 'கிரிப்ஸ் மிஷன்' வந்தபோது-பாகிஸ்தானத்தைப் பற்றி ஜின்னா விளக்கம்தந்தார். பெரியாருக்கும் அழைப்பு வந்தது. அன்றே பெரியார் அறிஞர் அண்ணாவைக் கொண்டு திராவிடநாட்டுப் பிரிவினையைப் பற்றி கிரிப்ஸ் மிஷனுக்கு விளக்கியிருந்தால், ஒருவேளை இச்சமயத்தில் நாட்டின் வரலாறு வேறுவிதமாகவும் இருக்கும். ஆனால் அண்ணாவின் அரசியல் அறிவு இங்ஙனம் நாடு முழுவதும் பரவ வேண்டும் என்று இருப்பது பொருத்தமாகவும் இருக்கிறது.

அண்ணா சுமார் ஐந்து முறை சிறை சென்றிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதில் இரண்டு முறை மொழிக்காகவே சிறைபட்டார். இந்தி எதிர்ப்புப் போரில் அவர் சிறைக் கூடம் புகுந்தது, இயக்கத்திற்கு ஒரு புது மெருகைத் தந்தது. தமிழ் என்றபோதும், தமிழ்ப் புலவர்கள் என்றபோதும் அவர் காட்டும் பணிவு மகிழ்வதற்கு உரியது. தமிழ் புலவர்களிடத்தில் ஒரு தனி மரியாதை. புலமை உள்ளம் வறுமை அடைகிறது எனின் அதைப் பார்க்கச் சகிக்கமாட்டார். தமிழ்க் கவிஞர் பாரதிதாசன் அவர்கட்கு அண்ணா மிக அரிதின் முயன்று பல இன்னல்களுக்கு உட்பட்டு ஒரு பெரும் பணமுடிப்பு அளித்த செய்தி தமிழ் உலகம் நன்கு அறியும். தமிழ்த் திருநாளைக் கொண்டாடும்படியும் தீபாவளி முதலிய பண்டிகைகளை நீக்கும்படியும் கூறி, தமிழ்ப் புலவர்களுக்கு எல்லாம் ஒரு நல் விளக்கமாய் அமைந்த பேராசிரியர் நமச்சிவாயர் படத்தை 1938-ல் திறந்து வைத்து பேசி பேச்சு ஒப்பற்றது. அன்று அப்பேச்சைச் செவிமடுத்த தமிழ் ஆசிரியர்கள் இன்றும் வியக்கின்றனர்.

ஆங்கில இரங்கல் உரையில் கிரேஸ் எலிஜி தான் சிறந்தது என்பது அறிஞர்கள் கண்ட முடிவு. தமிழில் நமது அண்ணா காந்தியார் மறைந்தபோதும், கே. வி. கே. சாமி அவர்கள் மறைந்தபோதும் எழுதிய இரங்கல் உரைகள். ஒரு நாள் உலக இலக்கியத்தில் இடம் பெறும் என்பது உறுதி.

நாடக உலகில் அண்ணாவுக்கு நிகர் அண்ணாவே. "ஓர் இரவு", "வேலைக்காரி" இரண்டும் மாற்றாரும் போற்றிப் புகழும் நாடகங்கள். கதையை நாடகமாக அமைக்கும் பண்பும், கட்டுக்கோப்பும், பாணியும், காட்சிகளின் அமைப்பும், உரையாடல்களும், நகைச்சுவையும், ஒரு மொழி-இரு பொளிருல் அமைந்த வாசகங்களும் எல்லோரையும் மயக்கமுறச் செய்கின்றன.

சுருங்கக் கூறின் அண்ணா தமிழ்ப் புலவர், விஞ்ஞானி, சீர்திருத்தவாதி, வரலாற்று ஆசிரியர், அரசியல் தத்துவப் பேராசிரியர், பொருளாதார வித்தகர், நாடக ஆசிரியர், திரைப்பட உரைநடை ஆசிரியர், பெருநாவலர், இதழாசிரியர், ஆராய்ச்சி அறிஞர், இல்லறத்தின் நல்லறப் பண்பாளர், தருக்க ஆசிரியர், உளவியல் அறிஞர், திறனாய்வாளர், திருவிடத்தின் காவலர் என்ற எல்லாப் பெருமைகட்கும் உரியவர் ஆவர். இன்று திராவிடம் இருக்கும் சுற்றுப்புறச் சூழலில் தமிழன் சிறிது தலை நிமிர்ந்து ஒருமுறை உலகத்தைச் சுற்றிப் பார்க்க முடிகிறது எனின் அது அண்ணா அவர்கள் நம்மிடை இருப்பதால்தான்.

ஐம்பது ஆண்டுகள் நிறைந்து பொன்விழாப் பெற்ற அண்ணா தமிழும் இனிமையும்போல் வாழ வேண்டும். அவர் வாழ்ந்த பெத்து நாயக்கன்பேட்டை, அரசியல்கிளர்ச்சிகளுக்குப் பேர்பெற்றது. அவர் நடந்த தெருக்கள், அவர் பல மணி நேரம் புல் தரையில் உட்கார்ந்து உரையாடிய சிவஞானம் பூங்கா, வசித்த இல்லம் எல்லாம் இருக்கின்றன. இவர் வசித்த ஐந்தாவது வீட்டில்தான் வீர அன்னை டாக்டர் தருமாம்பாள் வசித்து வந்தார்கள். தருமாம்பாள் எனின் அண்ணாவுக்கு அன்னையிடம் அரும் பாசத்தை வழங்கியவர். அப்படியே அண்ணா என்றாலும் அன்னை தருமாம்பாளுக்கு உயிர். அன்னையின் காதுகளில் விழும்படி அண்ணாவைப்பற்றி யாராவது சிறு சொல்லால்கூட மாறுபடச் சொன்னால் அவர்கள் அம்மையாரிடம் மன்னிப்புக் கேட்காமல் அப்புறம் செல்லமுடியாது. அன்னையின் வாழ்நாளின் கடைசி மூன்று ஆண்டுகளிலும் அண்ணாவின் தலையங்கங்களையும், சட்ட சபைப் பேச்சுகளையும் படித்துக் காட்டும் பேறு பெற்றேன். உடன் எவ்வளவோ பாடங்களும் அன்னையிடம் கற்றேன்.

அப்படிப்பட்ட அன்னையின் பெயரால் டாக்டர் தருமாம்பாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி அமைத்து அப்பள்ளியில் அண்ணா மணி மண்டபமும் (Leclure Hall) இராணி அம்மையார் விடுதியும் (Hostel) அமையப் பெறின், அது அண்ணா அவர்கள் வாழ்ந்த பேட்டையில், அவர் உலவி விளையாடிய இடத்தில், அவர் சொற்போர்கள் நிகழ்த்திய பேட்டையில் ஒரு நிலையான அறிவுக் களஞ்சியமாக அமையும் ஆயின் 1938-ன் வரலாற்றுச் சின்னமாக அம்மாபெரும் பெண்கள் பள்ளி திகழ்ந்து வழி வழி-வாழையடி வாழை அண்ணாவின் புகழை மங்காது பாடிக் களிக்கும்.

இச்சிறு மதியாளன் சிந்தனைக்கு இசைந்து டாக்டர் பேராசிரியரர் மணவாளராமானுசம் தலைமையில், நாவலர் நெடுஞ்செழியன், கண்ணதாசன், கலைஞர் கருணாநிதி உள்பட ஒரு குழு அமைந்திருக்கிறது. அக்குழு விரைந்து பணியாற்றி அண்ணா புகழ் பாடிப் பரவுமாக.

வாழ்க அண்ணா! வெல்க திராவிடம்!

சிறுவை ந. இனியன்

வருந்துகிறோம்.

சிவகாசி நகரில் சுயமரியாதை இயக்கக் காலந்தொட்டுப் பணி புரிந்தவரும், தி. மு. கழகத்தின் தொண்டராய் விள்ங்கியவரும், ஏட்டையா என்று கழகத் தோழர்களாலும் பொதுமக்களாலும் அன்பாய் அழைக்கப்பெற்றவரும், சிவகாசி நகராட்சி உறுப்பினராய் விளங்கியவருமான தோழர் ஏ. சுப்பையா அவர்களின் மறைவை அறிவிக்க வருந்துகிறோம்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தார்க்கும், சிவகாசிக் கழகத் தோழர்கட்கும் நம் இரங்கல் உரித்தாகுக.



மொ. வெற்றிச்செல்வன்,
திருப்பத்தூர்.

நம் கொடியின் பாதி கருப்பும் பாதி சிவப்பும் எதை நினைவு படுத்துகின்றன ?

சூழ்ந்திருக்கும் இழிவைக் கருப்பும், அதைத் துடைத்தழிக்கும் புரட்சியைச் சிவப்பும் குறிக்கின்றன.

★

இரா. தாமோதரன், திருப்பூர்.

முன்பு தி. மு. க. மாநாடுகளில் முதல் நாள் சமூக சீர்திருத்த மாநாடு நடக்குமே-இப்பொழுது ஏன் அம்மாதிரி நடப்பதில்லை ?

சமூகம் சீர்திருந்திவிட்டதாகப் பொருளல்ல. அரசியலுக்கே இரண்டு நாள் தேவைப்படுகிறது. அவ்வளவுதான்.

★

வி. இராமலிங்கம்,
கொப்பனாபட்டி.

வான்கோழி தமிழ்நாட்டுக்கு வந்தது எப்போது ?

ம. பொ. சி. பிறப்பதற்கு முன்னாலேயே வந்துவிட்டது.

★

செல்விமணாளன்,
புதுக்கோட்டை.

தங்களது கவிதைகளின் இரண்டாம் தொகுதி எப்போது வரும் ?

பொங்கல் திருநாளில், மதுரையில் விழாவெடுத்து வெளியிடப்படும்.

★

வள்ளுவப்பித்தன், கூழிபிறை.

எரிதழும் ஒட்டாமல் கூறும்படியான ஐந்து குறட்பாக்கள் தருக.

1330 குறளையும் திருப்பப் படித்துப் பார்க்கவேண்டிய அவசியத்தை உண்டாக்கி விட்டீர். படித்துப் பின் கூறுகிறேன்.

★

வே. அருணாசலம், தூத்துக்குடி.

புலவர் மறை திருநாவுக்கரசு அவர்களால் எழுதப் பெற்ற "மறைமலையடிகள் வரலாறு" என்னும் நூலில் "பள்ளியில்த் தான்", "தமிழ் கற்றவர்" என்னும் வார்த்தைகள் இருக்கக் கண்டேன். இலக்கணப்படி இவை சரிதானா ?

முதல் வார்த்தை தவறு. இரண்டாவது வார்த்தை சரியே. லகர ஒற்றுக்குப் பிறகு மற்றொரு ஒற்று வரமுடியாது. இதுபற்றி நடைபெற்ற வினாவிடைகளை கடந்த இரு "தென்றல்" இதழ்களில் பாரும்.

★

தேன்மொழி, புதுச்சேரி.

பெண்புத்தி பின்புத்தியாமே ?

ஆமாம். ஆய்ந்து முடிவெடுக்கும் அறிவு பெண்களுக்கே உரியது. பின்புத்தி என்பதுதெளிவுற்ற புத்தியையே குறிப்பது. இந்த இடத்தில், பட்டபின்வரும் அறிவை அது குறிக்கவில்லை.

★

"எப்படிப் பேசுவேன் ?"-

★

கண்ணதாசன் பேச்சு.

"செப்டம்பர் 15-ம் தேதியோடு அறிஞர் அண்ணா அவர்களுக்கு 50 ஆண்டுகள் நிறைகின்றன என்பதை முதன் முதலில் கண்டுபிடித்துச்சொன்னவன் நான்தான். அதனால் இப்போது இங்கு பேசிய பேச்சாளர்கள் அறிஞர் அண்ணா அவர்களுக்குச் சூட்டிய மாலைகளெல்லாம் என் கைவழியே போடுவதாகத்தான் பொருள். (கைதட்டல்) எதைச் சொல்லுவேன்? எப்படிப் பேசுவேன்? எந்த மகிழ்ச்சியில் உன் கண்களிலிருந்து கண்ணீர் வடிகிறதோ, அதுதான் உச்ச மகிழ்ச்சி. எந்தச் சந்திப்பு உன் வாயை அடைத்துவிடுகிறதோ, அதுதான் இணையற்ற சந்திப்பு. எந்த விழாவிலே நீ பேச முடியாமல் திண்டாடுகிருயோ, அந்த விழாவேஉன் வாழ்விலே திருவிழா. அண்ணாவுக்கு இது பொன்விழா. எனக்கு இது திருவிழா. அண்ணாவின் மணிவிழா வரை, இந்த மகிழ்ச்சி என் வாயை அடைத்தே வைத்திருக்கும்."

—17—9—'59 அன்று சென்னைக் கடற்கரையில் பலலட்சம் மக்கள் கொண்டாடிய பொன்விழாக் கொண்டாட்டத்தில், கண்ணதாசன் இப்படிக் கூறினர்.

திருத்தம்.

இவ்விதழ் பன்னிரண்டாம் பக்கத்தில் உள்ள "பொன்விழா வாழ்த்து"ப் பாடலில் மூன்றும் அடி 'தூய தமிழ்த் துரையாதல் காட்டுதலால்" எனச் சில படிகளில் அச்சாகியுள்ளது. அதனை, "தூய தமிழத் துரையாதல் காட்டுதலால்" எனத் திருத்தி வாசித்துக் கொள்க. தவறுக்கு வருந்துகிறேம். —ஆ-ர்.

ஆசிரியத் தோழமைக்கு.

அன்பரீர்,

வணக்கம்.

தங்களது 5-9-59-ம் தேதித் தென்றல் எனக்குக் கொணரப்பட்டது; கண்டேன். இதழாசிரியர் தம் சுற்றுப்பயணக் குறிப்பில், "காரைக்குடிக் கல்லூரிகளில் தமிழ் வெள்ளம்" என்ற தலைப்பில் தங்களது உணர்ச்சிவெள்ளம் உண்மையை அடித்துக்கொண்டு போகக் கண்டேன். 'திரை' மறைவு செய்யப்பட்ட உண்மையைத் தங்கட்குத் தெரிவிக்கவே எழுதுகிறேன்.

"உண்மை வீட்டைவிட்டுத் தலைநீட்டுமுன் பொய் உலகை ஒன்பது முறை சுற்றி வந்துவிடும்" என்பார்கள். தங்கள் இதழ் 2-ம் பக்கம் நான்காம் பத்தியில் என்னைப்பற்றி ஒன்பது வரிகள் எழுதியுள்ளீர்கள். 1-9-1959-ல் கல்லூரி வட்டத்து நிகழ்ச்சிக்கும் எனக்கும் உள்ள தொடர்பைப் பொறுப்புள்ளவர்களிடம் கேட்டறியாது, சொந்த விருப்பு வெறுப்புச் சாயம் பூசியுள்ளீர்கள். என்னைத் 'தமிழ்ப்பகைவன்' என்றும் 'இனப் புல்லுருவி' என்றும் குறித்துள்ளீர்கள். வகுப்பில் மாணவர்களின் தமிழ் உணர்ச்சியைக் கேலி செய்ததாகக் கேட்டெழுதியுள்ளீர்கள். தமிழ்வகுப்பில் தமிழாசிரியர் ஒருவரே தமிழ் உணர்ச்சியைக் கேலிசெய்வதைக் கேட்டு அழகப்பா கல்லூரி மாணவர்கள் பொறுத்திருந்தார்கள், அதுவும் கடந்த எட்டாண்டுகளாக என்ற இழிவை மாணவர்கட்குத் கற்பித்துள்ளீர்கள்.

வகுப்பறைக்குள் அரசியல் வண்ணம்பூசிச் சில்லறைச் செல்வாக்குப் பெறும் வழக்கம் எனக்கில்லை. மொழிஉணர்ச்சி, அதன் வளர்ச்சி என்பன பற்றி முறையாக உரையாற்றும் பொறுப்பை நன்கு உணர்ந்தே பணியாற்றி வருகிறேன். தமிழ்மானம் காக்க எழுந்த எந்நிகழ்ச்சியிலும் நான் பின்னிட்டேனில்லை என்பதைக் கல்லூரி மாணவர் அனைவரும் அறிவர்; சென்னைத் தென்றல் மட்டும் உணரவில்லையே என வருந்துகிறேன்.

இதற்கெல்லாம் மாருகத் தங்கள் 5-9-59 இதழில் தங்களால் எனக்கு இழிவு கற்பிக்கப்பட்டிருக்கிறது. என் அலுவலையும் எதிர்கால வாழ்வையும் பாதிக்கும் வகையில் அக்கற்பனைகள் அமைந்துள்ளன. எனவே என்மீது திணிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளைத் திருத்தித் தங்கள் இதழில், உண்மைச் செய்தியை வெளியிட வேண்டுகின்றேன்.

என்மீது கொட்டப்பட்ட கறையைக் கழுவுவதே பொறுப்புள்ள இதழாசிரியரின் கடமை. கடமையே நோக்காகக் கொண்டார்க்கு இத்தனிமனித உரிமை பேணும் கடமை நிறைவேற்றத்தை வற்புறுத்த வேண்டுவதில்லை. வணக்கம்.

அன்புடன்,
சு. குழந்தைநாதன் எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர், அழகப்பாக் கல்லூரி,
காரைக்குடி-3.

[இக்கடிதத்துடன் தமிழ்ப்பேரவைச் செயலாளர் எனப்படுபவரின் கடிதமும் வந்தது. நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் மேற்படி விரிவுரையாளர்பற்றி எனக்குக் கூறினர். சொந்த முறையில் அவரை யான் சரியாக அறியேன். ஆனால், பெரும்பாலோர் 'வீண்பழி' சுமத்தமுடியாதல்லவா ? போகட்டும். 'தமிழ் மானம் காக்கும் போரில் ஈடுபடத் தயங்கேன்' என்னும் வீரமொழியே இந்நிகழ்ச்சிக்கு இருபாலும் கழுவாயாக அமையட்டும்.

பேரவைச் செயலாளர், யான் 'கட்சிக் கண்' கொண்டு நோக்குவதாகக் குறைப்பட்டுள்ளார். வேறு வழியில்லை. எங்களுக்குக் கட்சிதான் கண்களையே கொடுத்தது. கட்சியும் மொழியும் பிரிக்க முடியாமல் பிணைந்துவிட்டன. கட்சிக்கண்களே மொழிக்கண்கள்; இனக்கண்கள்; கலைக்கண்கள். அறிக, நண்பர்!

—ஆ-ர்.]

தொல்காப்பியச்சுவை!

13. மரபியலின் சிறப்பு.

இராம. இராமநாதன்
பி.ஏ. (ஆனர்சு)

தமிழர் தம் வாழ்வியல் மிகவும் சுவை உடையதோடு ஒழுங்கு முறையும் உடையது என்றால் உண்மை. எடுத்த செயலை முடிக்கும் ஆற்றலும் ஏற்ற தொரு செயலை எப்பாடுபட்டாயினும் நிறைவேற்றும் உறுதியும் உடைய மரபு, தமிழர் சங்ககாலத்தில் பேணிய மரபாகும். உலகிலெல்லாம் உயர்ந்து விளங்கிய இனம் தமிழ் இனம் என்றால் அது தமிழர் பேணிய மரபே காரணமாகும்.

அத்தகைய சீரும் சிறப்பும் பெற்றிருந்த இனத்தில் தலைவன் - தலைவியர் உண்மையும் உறுதியும் உடைய உத்தமராய் உலவினர். தலைவன் விரும்பிக் கூறும் - எழுதும் செயலைத் தலைவி குறித்த நாளில் குறித்த முறையில்-நிறைவேற்றிக் களிப்பும் பெருமையும் அடைவாள். அஃது அந்தக் காலத்தின் சிறப்பு! இன்றோ, ஒரு தலைவன் தனது அருமைத் தலைவிக்கு மடல்தீட்டி "ஒரு செயலைச் செய்து முடிப்பாயா?" என்று வேண்டி, தலைவியும் செய்து முடிப்பதாய்க் கூறி - இறுதியில் "மறந்துவிட்டேன், மன்னித்து அருளவேண்டும். உங்கள் பேரன்பிற்கு நன்றி" என்று மறுமொழி விடுக்கும் நிலை, வெட்கப்படும் நிலையாகும். மரபு உணரா மக்கள் உலவுதல் மாண்பில்லை. அவரும் நம் மரபு உணரவேண்டும் என்பதே என் விருப்பம்.

சென்ற கட்டுரையில் எடுத்துக் கொண்ட சில செய்திகளுக்குத் தெளிவுதர வேண்டி இக்கட்டுரையும், அடுத்த கட்டுரையும் பயன்படும் என்று நம்புகின்றேன்.

தொல்காப்பிய மரபியலில் சில சூத்திரங்களின் வைப்புமுறை மாறி இருக்கின்றன என்பது என் கருத்து. ஒருவேளை தவறாகவும் இருக்கலாம். அறிஞர் ஆராய்ந்து முடிவுகாண விழைகின்றேன்.

மரபியலின் தொடக்கத்தில் முதலில் இளமைப் பெயர்களைப் பற்றிய பொதுச் சூத்திரம் உள்ளது. அடுத்து ஆண்பாற் பெயர்களைப் பற்றிய பொதுச்சூத்திரம் காணப்படுகிறது. அதற்கு அடுத்தாற்போல் பெண்பாற் பெயர்களைப் பற்றிய பொதுச்சூத்திரம் காணப்படுகிறது. நான்காவது முதல் இளமைப் பெயர்களைப் பற்றிய தனிச் சூத்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன. 571 ஆவது சூத்திரம் மரபியலின் 27-ம் சூத்திரமாகக் காணப்படுகிறது. இதுமுதல் 7 சூத்திரங்கள் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள உயிர்களைப் பேசுகின்றன அதன்பின் பெண்பாற் பெயர் வருகின்றது. "இவ்வாறுஇருப்பது முறை பிறழ்ந்ததோ?" என்ற ஐயம் எனக்கு உண்டாகிறது. எனவே இச்சூத்திரம் மரபியலின் நான்காவது பொதுச்சூத்திரமாய் இருந்திருக்கலாமோ என்று கருதுகின்றேன். மற்றொன்று மரபியலின் 91-ம் சூத்திரமாகும். இதுவும் உலக மரபைப் பொதுவாகக் கூறுவதால் மரபியலின் 5 ஆவது சூத்திரமாக அமைந்திருப்பின் நலம் என்பது என் கருத்தாகும்.

சென்ற கிழமை எனது கட்டுரையில் சில செய்திகளை விளக்கிக் கூறுவதாய் எழுதி இருந்தேன். அதில் ஒன்றினை மேலே எடுத்துக் கூறியிருக்கிறேன். மற்றொன்று சாதி பற்றிய இடைச் செருகலாகும். தமிழர்தம் வாழ்வியலை வளமாகக் கூறும் தொல்காப்பியத்திலேகூட இடைச்செருகல் என்றால், தமிழர் சோர்வு காரணமாக-தொல்காப்பியத்தைக் கடினம் என்று படிக்க மறந்ததன் காரணமாகப் பிற்காலத்தே வந்த பிற்போக்கு நோக்கம் உடையவர்கள் தங்கள் கருத்துக்களை இடையே நுழைத்துவிட்டனர். நமது சென்ற கால உறக்கம் இக்கால இரக்கமாக மாறிவிட்டது.

தொல்காப்பியர் ஒரு பொருளைப் பேசுவது என்றால் சில வரன் முறைகளைக் கைக்கொண்டுதான் பேசுவார். முதலில் அப்பொருளைப்பற்றிய பொதுச் சூத்திரத்தை, அதாவது தொகைச் சூத்திரத்தைக் கூறியபின் அக்குறிப்பிட்ட சூத்திரத்தின் தனிப் பொருளை ஒவ்வொன்றாய்ப் பேசுவார், மரபியலில்மட்டுமில்லாமல், பிற எட்டு இயல்களிலும் இவ்வாறு தான் காணப்படுகின்றது.

70-ம் சூத்திரம் வரை விலங்குகளின் பெண்பாற் பெயர்கள் வரும் முறையை, மரபை விளக்குகின்றார். 71-ம் சூத்திரத்தில் உள்ளது;

> "நூலே கரகம்
> முக்கோல் மணையே
> ஆயுங் காலை
> அந்தணர்க் குரிய"
> (615-71.)

ஏதோ தூங்கி விழிப்பவன் திடீரெனப் பிதற்றுவதுபோல் விலங்குக்குப் பிறகு நான்கு பிரிவுகளைப்பற்றிப் பேசுகிறார் தொல் ஆசிரியர். தொல்காப்பியர் தொகைச் சூத்திரம் கூறாமல் பிரிவுகளைக் கூறுபவரே அல்லர்; அந்தணரைப்பற்றிக் கூறியவுடன் அரசரையும் வணிகரையும், வேளாளரையும் கூறுகின்றாராம். இடைக் காலத்தே தலைதூக்கி நின்ற சாதிப் பூசலின் விளைவால் அந்தணரே உயர்ந்தவர் என்ற கருத்து வலியுற யாரோ எழுதிச் சேர்த்த சூத்திரங்கள் 71 முதல் 85 வரை உள்ளன.

85-ம் சூத்திரத்திற்குப் பிறகு செடி, கொடிகளைப்பற்றிப் பேசுகிறார் தொல் ஆசிரியர். 70 வரை விலங்கினங்களைப்பற்றியும் 71 முதல் 85 வரை மக்களைப்பற்றியும் 85-க்கு மேல் செடி கொடிகளைப்பற்றியும் பேச, தொல்காப்பியர் அறியாதவர் அல்லர். யாரோ விலங்குக்கும் செடி கொடிக்கும் இடையில் எழுதிப் புகுத்திவிட்டதே சாதிபற்றிய சூத்திரங்கள் என்றால் தவறில்லை. இக் கருத்தையே நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியார் வலியுறுத்துகிறார்.

சாதிபற்றிய சூத்திரங்களும் சற்று வேடிக்கையாகவே காணப்படுகின்றன. முதல் சூத்திரத்தில் "ஆயுங் காலை அந்தணர்க்கு உரிய" என்கிறார். நூல், கரகம், முக்கோல், மணை ஆகிய பொருள்களை ஆய்ந்தால் அந்தணர்க்காம்; ஆயாவிட்டால்.. அப்பொழுது எல்லோருக்கும் போலும்! 75-ம் சூத்திரம் ஒரு வற்றல் சூத்திரம். வடமொழிக் கருத்தை அப்படியே எடுத்து எழுதியதுபோல் உள்ளது.

> "ஊரும் பெயரும்
> உடைத்தொழிற் கருவியும்
> யாரும் சார்த்தி
> அவையவை பெறுமே."
> (619-75)

புதிய ஆராய்ச்சி! "இதுதேவையா?" என்பதைப் படிக்கும் நீங்களே முடிவு செய்க! இதனைத் தொல்லாசிரியர் கூறியிருப்பாரா?

அடுத்து 77-ம் சூத்திரக் கருத்து 82-ம் சூத்திரக் கருத்தோடு மாறுபடுகின்றது.

> "இடையிரு வகையோர்
> அல்லது நாடிற்
> படைவகை பெறாஅர்
> என்மனார் புலவர்."
> (621-77)

தொல்காப்பியர் ஒன்றை 'இல்லை' என்றால், பின் 'உண்டு' என்று உரைப்பவர் அல்லர். அரசரும் வணிகரும் அல்லாதோர் படை கொண்டு போரிடுதல் இல்லை என்பது விதி ஆனால் 82-ம் சூத்திரத்தில்.

> "வேந்துவிடு தொழிலிற்
> படையுங் கண்ணியும்
> வாய்ந்தனர் என்ப
> அவர்பெறும் பொருளே."
> (626-82)

என்பது மாறுபடுகின்றது. வேளாளரும் படைகொண்டு போரிடலாம் என்பது "படைவகை பெறாஅர்" என்ற முன் சூத்திரக் கருத்துக்கு முரணாகும். இவ்வாறு தொல் ஆசிரியர் கூறியிருக்கமாட்டார்.

78-ம் சூத்திரத்தில் வாணிகரது வாழ்வு கூறப்படுகிறது.

> "வைசிகன் பெறுமே
> வாணிகன் வாழ்க்கை"
> (622-78)

வைசிகன் என்ற சொல்லே வடசொல்! அடுத்த சூத்திரத்திற்குப் பொருள் வேறுபட்டது. இது மனுவில் கூறப்படும் செய்தியாகும்! வடநாட்டுச் சரக்கு விலை போகாத காரணத்தால் தொல்காப்பிய மரபியலுள் நுழைத்தார்கள் போலும். உறங்கிய இனம் விழிக்காது என்ற எண்ணத்தில்!

> "மெய்திரி வகையின்
> எண்வகை உணவின்
> செய்தியும் வரையார்
> அப்பா லான"
> (623-79.)

மனுவில் வாணிகம் செய்யும் நிலை பற்றி இவ்வாறு உள்ளது. இவையிற்றை உண்டாக்குகின்ற உழவுத் தொழிலும் வாணிகர்க்கு வரையார் என்று உரை கூறுகிறது. நெல், காணம், வரகு, இறுங்கு, தினை, சாமை, புல்லு, கோதும்பை முதலியவற்றை உழவருடன் வாணிகரும் விளைக்கலாம் என்கிறார். ஆனால் அவ்வாறு பாடுபடாமல், உண்டு கொழுப்பது "அந்தணர் இனம்" என்பதால் அவர்க்குக் கூறப்படவில்லை போலும்! இதனை எழுதிச் சேர்த்தவரும் அந்தணராகவே இருக்க வேண்டும் என்பது கருத்து.

81-ஆம் சூத்திரம் கூறுவது:

> "வேளாண் மாந்தர்க்
> குழுதூ ணல்லது
> இல்லென மொழிப
> பிறவகை நிகழ்ச்சி"
> (625-81.)

வேளாளருக்கு உழுது உண்ணும் வாழ்வைத் தவிர வேறு எத்தொழிலும் இல்லை என்று முடிவாகக் கூறப்படுகிறது. இதனையே கூறும் வரிதான் "உழுதூண் அல்லது இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" ஆகும். ஆனால் அடுத்த சூத்திரமே படையில் போருக்குச் செல்ல வேண்டும் என்று கூறுவது பொருந்தாது.

★

அடுத்த கிழமை—
தொல்காப்பியத்தில்:
"மரபியலும் நாமும்."

பொன்விழா வாழ்த்து.

●

"அண்ணாத் துரையென் றமைந்த தனித்தமிழ்ப்பேர்
அண்ணா வெனவழைக்கும் ஆற்றலராய்ப்-பின்னுளில்
தூய தமிழ்த் துரையாதல் காட்டுதலால்
வாயும் இனிநீடு வாழ்வு!"

—அண்ணா அவர்களின் பொன்விழாவை யொட்டி "தென்றல்" மூலம் இவ்வாறு வாழ்த்துகிறார் திராவிட மொழி நூல் முனைவர் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் எம். ஏ. அவர்கள்.